தி/மூ/இலங்கைத்துறைமுகத்துவாரம் இந்துக் கல்லூரி

க.பொ.த.உயர்தர பரீட்சை மாதிரி வினாத்தாள் – 06

தமிழ் - I,II

விடைக் குறிப்புக்கள்

தமிழ் - I

பகுதி - I

01. அ) சங்கப்பாடல்

1. இப்பாடலினுடைய துறை பரிசில் கடாநிலை என்பதாகும். பரிசில் கடாநிலை என்பது யாவரும் பரிசில் பெற்றார். யான் பெற்றிலன் எனத் தனது பரிசில் பெறும் விருப்பத்தைப் பரிசில் கொடுப்போனிடத்தே புலப்படுத்திக் கூறுதல். பரிசில் அவரை விட்டு நீங்காமல் இருக்கும் தலைவனுக்குப் பரிசில் விரும்பியோன் தன் சுற்றத்தினரது துன்பம் முதலியவற்றைக் கூறிப் பரிசில் கேட்டு நின்ற நிலை, பரிசில் தாழ்ப்பினும் தருதல் தப்பாது என்று உரைத்து அதனைத் தருமாறு குறிப்பால் வேண்டுதல் முதலானவை ஆகும்.

2. ஒருநாள் அல்லது இருநாள்கள் செல்லவில்லை பலநாட்கள் தொடர்ந்து பலரோடு நாம் சென்றாலும் அதியமான் முதல்நாள் போலவே நம்மிடம் விருப்பமுடையவனாக இருக்கின்றான். அழகிய அணிகலன்கள் அணிந்த யானைகளையும், நன்கு சீராகச் செய்யப்பட்ட தேர்களையுமுடைய அதியமான் பரிசளிப்பதற்கு காலம் தாழ்த்தினாலும் காலம் தாழ்த்தாவிட்டாலும் யானை தன் கொம்புகளுக்கிடையே கொண்ட உணவுத்திரளை உண்ணத் தவறாதது போல் அப்பரிசு (மன்னன் அதியமான் வழங்கும் பரிசு) நம் கையில் இருப்பதாகவே நம்பலாம் தப்பாமல் கிடைக்கும் பொய்யாகாது. பெற ஆசைப்பட்ட நெஞ்சே! நீ பரிசிலுக்கு வருந்த வேண்டாம். வாழ்க அவன் திருவடிகள்.

3. ஆசிரியர் இப்பாடலில் உவமையணியினைக் கையாண்டுள்ளார். அதாவது நெடுமான் அஞ்சியின் பரிசில் கட்டாயம் கிடைக்கும் என்பதற்கு உவமையாக யானையின் கொம்பகளுக்கு இடையில் வைக்கப்பட்ட கவளம் காட்டப்பட்டுள்ளது.
உவமானம் - யானையினது கோட்டிடை வைக்கப்பட்ட கவளம் எப்படியும் அதன் வாயகத்தை சேர்வது.
உவமேயம் - காலம் தாழ்ந்தாலும் தாழ்த்தாவிட்டாலும் எப்படியும் நிச்சயமாக கைவந்து சேரும் அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத்தன்மை. பொதுத்தன்மை - நிச்சயமான கொடைத்தன்மை.

ஆ) குகப்படல பாடல்

1. பரதனது படையின் வருகையினை கண்ட குகன், இப்படை இராமனோடு போர் செய்வதற்காகவே வந்திருக்கின்றது என கோபத்தோடு கங்கையின் தென் கரைக்கு வந்த சந்தர்ப்பத்திலே இப்பாடல் பாடப்பட்டது.

2. "துப்புடை கடலின் நீர் சுமந்த மேகத்தை ஒப்புடை அண்ணலோடு" எனும் பாடலடியில் உவமை அணியினை கம்பர் கையாண்டுள்ளார். அதாவது முத்துடைய கடலில் இருந்து நீரை சுமந்த மேகத்தை ஒத்த இராமன் என்று உவமை அணியின் மூலம் இராமன் சிறப்பிக்கப்பட்டுள்ளார். இராமனுடைய கருமை நிறத்திற்கு உவமையாக கடலில் இருந்து நீர் சுமந்த மேகம் காட்டப்பட்டுள்ளது.
உவமானம் - முத்துடைய கடலில் இருந்து நீரை சுமந்திருக்கின்ற மேகம்
உவமேயம் - இராமன்
பொதுத்தன்மை - கருமை நிறம்

3. பரதனது படையானது கங்கைக் கரையை அடைந்த சந்தர்ப்பத்தில், இந்தப் படையானது இங்கு வந்தமைக்கான காரணம் முத்தினையுடைய கடல் நீரை உட்கொண்ட மழை மேகத்தை ஒத்த இராமனோடு போர் செய்வதற்காகவே என்று கருதி எழுந்த கோபத்தோடு தென்கரை வந்தான்.

02. அ) கவிதை – பாரதியார்

1. இக்கவிதையிலே மு. நல்லதம்பி அவர்கள் மகாகவி சுப்பிரமணியப் பாரதியார் மீதும், அவரது பாடல்கள் மீதும் கொண்டிருந்த ஆழமான பக்தியினை வெளிப்படுத்தியுள்ளார். அந்தவகையிலே பாரதியாரின் சிறப்பும் அவருடைய பாடல்களின் சிறப்பும் இக்கவிதையின் முக்கிய விடயப் பொருளாகும்.

2. பாரதியாருடைய பாடல்கள் உலகிற்கு ஒளி தருபவை, வாடாமல் இருப்பவை, இன்பங் குறையாதவை, புத்தம் புதிய சுவை தருபவை, கல்லையுருக்கும் சுவைமிக்க பண்புகளைக் கொண்டவை, உயிரினங்களை மயக்குபவை, துன்பம் நீக்குபவை, சாரலருவிகள் போல சந்தமிகுந்த சிந்துகள் போல வீழ்ந்து உள்ளத்தை உருக்குபவை, காதலையும் வீரத்தையும் தருபவை, விலங்குகளையும் மயக்குபவை எனச் சிறப்பிக்கப்படுகின்றன.

3. இக்கவிதையிலே ஆசிரயர் உருவக அணிகளையும், உவமையணிகளையும் கையாண்டுள்ளார். அந்தவகையிலே
பாரத நாட்டினை தாமரைத்தடாகமாக உருவகித்துள்ளார் - 'பாரத நாடென்னும் வாவியிலே..'
பாரதியாரை தாமரையாக உருவகித்துள்ளார் - 'பாரதியென்றொரு தாமரை..'
பாரதியார் பாடல்களை தாமரை இதழ்களாக உருவகித்துள்ளார் - 'அதன் சீரிதழாயிரம்..'
பாவலர்களை வண்டுகளாக உருவகித்துள்ளார் - 'காமரு பாவலராகிய வண்டினங்..' போன்ற உருவக அணிகளையும்,
பாரதியாருடைய பாடல்கள் ஒளி வீசுவதற்கு உவமையாக சூரியன் ஒளி வீசுவது காட்டப்பட்டுள்ளது.
பாரதியாரின் பாடல்கள் மனங்களில் விழுந்த உள்ளத்தை உருக்குவதற்கு உவமையாக மலைச்சாரலில் இருந்து விழுகின்ற அருவி காட்டப்பட்டுள்ளது.
பாரதி பாடல்கள் புத்துயிர் போல் சித்திரங் காட்டுது போன்ற உவமையணிகளையும் குறிப்பிடலாம்.

4. இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் எளிய மொழிநடையினைக் கையாண்டுள்ளமை
உருவக அணி, உவமை அணிகளைக் கையாண்டு கவிதையினைப் படைத்துள்ளமை
பாரதியாரின் பாடல்களை மலர்களை விடச்சுவையானது, இனிமையானது, தேன்போன்றது, காதல், வீரம் ஊட்டுவது போன்றவாறு சிறப்பித்துப் பாடியுள்ளமை
சந்தத்தோடும் இசையோடும் பாடக்கூடிய வகையில் கவிதையினைப் படைத்துள்ளமை
இயன்றளவு ஒரு சில சொற்கள் தவிர்ந்த ஏனைய சொற்கள் தூய தமிழ்ச் சொற்களாக அமைந்தள்ளமை

ஆ) உரைப்பகுதி – மானுடம் தழுவிய கவிஞர்கள்

1. வள்ளுவர், இளங்கோ, கம்பர், பாரதி ஆகிய கவிஞர்கள் தமது படைப்புக்களை மானுடம் பயனுற வாழ்வதற்கு, கூறியதோடு காலத்திற்கு ஏற்ப சமூகம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற உணர்வையும் வெளிப்படுத்தியிருந்தமையால் அவர்கள் மானுடம் தழுவிய மகா கவிஞர்கள் என நிலை பெற்றனர். என்பதே இப்பகுதியின் முக்கிய விடயப் பொருளாகும்.

2. இலக்கியம் என்று கூறும் போது நம் உள்ளத்தில் சிந்தனையில் பல எண்ணக்கூறுகள் ஒரே நேரத்தில் தோன்றுதல், ஒருவரது கல்வி, பயிற்சி, உணர்வு, அனுபவம், உலக நோக்கு இவற்றுக்கு ஏற்ப இலக்கியம் பற்றிய வரைவிலக்கணமும் வேறுபடும், சொல் அலங்காரம், சப்தநயம், உவமை, உருவகம் முதலியன உணர்வினைத் தாங்கி வாழ்க்கைக்கு புதிய விளக்கம் தரும் கருத்துக்களே இலக்கியத்தின் உயிர் நாடியாகும். என ஆசிரியர் இலக்கியம் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

3. மகா கவிஞர்கள் குறைவில்லாத மொழியாற்றலைப் பெற்றிருப்பவர், தமது சமகால சமுதாய அடிப்படைப் பிரச்சினைகளை அறிந்து அவற்றிற்கு பரிகாரம் காண முற்படுபவர், தமது சொந்த அனுபவங்களை மாத்திரம் பொருளாகக் கொள்ளாது மனித குலத்தின் நிலையினை உணர்ந்து அதனுடன் கலந்து படைப்புக்களை எழுதுபவர் என கவிஞர்களின் பொது இலக்கணப் பண்புகளை ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

4. இக்கட்டுரையிலே ஆசிரியர் சிறப்பான மொழிநடையினைக் கையாண்டுள்ளார். அந்தவகையிலே நியாயிக்கும் ஆற்றல் வாய்ந்த செழுமையான மொழிநடை, நியாயங்களை ஒழுங்குமுறையில் வரிசைப்படுத்திக் கூறும் தர்க்க ரீதியான நடை, ஐயப்பாட்டுக்கு இடமற்ற தெளிந்த மொழி நடை, ஆதார பூர்வமான விளக்கங்கள் காணப்படுகின்றமை, கட்டுரையின் கனதிக்கு ஏற்ப மொழிநடையும் வலுவாக அமைந்திருந்திருக்கின்றமை, இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடிய சொற்களின் எளிமையான வாக்கிய அமைப்புக்களின் பயன்பாடு, பழைய செந்தமிழ் நடையை இலகுவாக்கிய, உள்ளத்தெளிவும் உயர்ந்த குறிக்கோளுடனும் கூடிய உயிரோட்டமான மொழி நடை, ஆய்வு நிலைப்பட்ட இயல்பினை சிக்கலற்ற வகையில் எளிமை, தெளிவு, சுவை போன்ற பண்புகளை உள்ளடக்கிய மொழிநடை, சிறந்த சொற்களைத் தெரிந்து வாக்கியங்களில் அழகுற அமைத்து பிற மொழிச் சொற்களை கலவாத தனித்தமிழ் நடை போலவும் அமைந்துள்ளமை, வாக்கியங்கள் சற்று நீண்டனவாக அமைந்துள்ளமையால் அவை ஆழமான கருத்தை பயன்படுத்த உதவின. இவ்வாறான மொழிநடையினைக் கையாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பகுதி - II

03. திருக்குறள் - இடனறிதல்

அ) தனது வலிமையையும் பகையை வெல்வதற்குரிய பொருத்தமான காலத்தையும் பகைமேற்செல்லும் அரசர், வெல்வதற்குரிய நிலத்தின் தன்மையையும் அறிந்து ஒழுகுதலை இடனறிதல் எனலாம். தன் வலிமை, பொருத்தமான காலம் என்பவற்றை அறிந்த அறிவுடைய அரசன் இடமறிந்தே செயலாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தவே காலமறிதல் அதிகாரத்தை அடுத்து இவ்வதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.

ஆ) பகைவர் அரணின் புறந்திருப்பார் இடம் அறிதலினை 1 தொடக்கம் 4 வரையான குறள்கள் விளக்குகின்றன.
பகைவரை சூழ்ந்து முற்றுகையிடத் தகுதியான இடத்தைக் கண்டபின் அல்லாமல், எந்தச் செயலையும் செய்யவேண்டாம். அவர் பலவீனமானவர் எனக் கருதி இகழவும் கூடாது.

"தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடம் கண்ட பின் அல்லது "

ஒன்றுக்கொன்று மாறுபட்ட வலிமையுடையவர்க்கும், அரனைச் சேர்ந்திருத்தலினால் உண்டாகும் வெற்றியானது பலவகைப் பயன்களைத் தரும்.

"முரண் சேர்ந்த மொய்ம்பினவர்க்கும் அரண் சேர்ந்து ஆம்
ஆக்கம் பலவும் தரும்"

பகைவரை வெல்லக்கூடிய பொருத்தமான இடத்தை அறிந்து, தம்மைப் பாதுகாத்துப் பகைவரை எதிர்த்துப் போர்செய்ய முனைந்தால், வலிமை இல்லாதவரும், வலிமையுடையவராய் வெற்றி காண்பர்.

"ஆற்றாரும் ஆற்றி அடுப இடம் அறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்"

தனக்குப் பாதுகாப்பான தகுதியான இடத்தை ஆராய்ந்து பற்றிக் கொண்டவர்கள், போரையும் நெருங்கிச் செய்தாரானால், அவரை வெல்ல எண்ணியவர், தம் எண்ணம் இழப்பார்கள்.

"எண்ணியார் எண்ணம் இழப்பர் இடன் அறிந்து
துன்னியார் துன்னிச் செயின்"

இ) வினை செய்வதற்கான இடத்தினை அறிவதனை 5 தொடக்கம் 6 வரையான குறள்கள் விளக்குகின்றன.
ஆழமான நீரினுள் மற்றைய உயிர்களை முதலை வெற்றிகொள்ளும். நீரைவிட்டு வெளியே வந்தால், முதலையை மற்றைய விலங்குகள் கொன்றுவிடும். அதுபோல் தனக்கு பாதுகாப்பான இடத்திலிருந்து போரிடும் மன்னன் எப்பேற்பட்டவரையும் வெல்லுவான். அதேவேளை அக் காப்பிடத்தை நீங்கிப் போரிடும்போது வலிமை குன்றிய பகைவரும் அவனை வெல்வர்.

"நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற"

நிலத்தில் ஓடுவதற்குரிய வலிய சக்கரங்களைக் கொண்ட தேர்கள் கடலில் ஓடா. கடலில் ஓடக்கூடிய கப்பல்களும் நிலத்தில் ஓடமாட்டா. எனவே அவரவர்க்கு ஏற்ற இடத்தில்தான் வலிமை காணப்படும்.

''கடல் ஓடா கால் வல் நெடுந்தேர் கடல் ஓடும்
நாவாயும் நிலத்து ஓடா''

ஈ) பகைமேற் சென்று தாக்கலாகா இடங்களும் தாக்கின் நேரும் தீங்கினையும் 7 தொடக்கம் 10 வரையான குறள்கள் விளக்குகின்றன.

பகைவரை வெல்லத்தக்க செயல்களை எல்லாம் நன்கு ஆராய்ந்து தகுதியான இடத்திலும் அதைச் செய்வாரானால், அவர்க்கு மனவுறுதியைத் தவிர வேறு துணை எதுவும் வேண்டாம்.

''அஞ்சாமை அல்லால் துணை வேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தான் செயின்''

பெரும் படையை உடைய அரசன், சிறு படையை உடைய பகைவரை அழிக்கக் கருதி, அவனது பாதுகாப்பையுடைய இடத்தைச் சேர்வானாயின், அவனால் இவனது பெருமை அழிந்துவிடும்.

''சிறுபடையான் செல் இடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்''

பகைவரிடம் பாதுகாப்பான அரணும், பெருமையுடைய வலிமையும் இல்லாவிடினும், அவர்கள் உறைகின்ற நிலத்திற் சென்று, அவர்களைத் தாக்கியழித்தல் அரியதாகும்.

''சிறை நலனும் சீரும் இலர் எனினும் மாந்தர்
உறை நிலத்தொடு ஒட்டல் அரிது''

போர்க்களத்தில் வேலேந்திய வீரரையும் கோத்து எடுத்த கொம்புடை அஞ்சாத ஆண்யானையும் கால்கள் புதையக்கூடிய சேற்று நிலத்தில் அகப்பட்டால், சிறிய நரியும் அதனைக் கொன்றுவிடும்.

''கால் ஆழ் களரின் நரி அடும் கண் அஞ்சா
வேலாள் முகத்த களிறு''

04. கம்பராமாயணம் - குகப்படலம்

அ) காட்டிற்கு சென்ற இராமபிரானைத் தேடி அவன் சென்ற வழியில் பின்தொடார்ந்து சென்ற பரதனின் சேனையின் சிறப்பு மிகுந்த வர்ணிப்பினை கம்பர் அழகுற வர்ணிக்கின்றார். அந்தவகையிலே குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை, காலாட்படை எனும் நாற்படைகளையும் கொண்டமைந்ததாகவும் பரதனின் சேனை விளங்கியது. அதன் அடிப்படையில் பரதனின் அளவிட முடியாத சேனையில் அங்கம் பெற்ற யானைப் படையின் சிறப்பினை பின்வரும் பாடல் வாயிலாக விளங்கிக் கொள்ளலாம்.

''எண்ண அருஞ் சுரும்பு தம் இனத்துக்கு அல்லது
கண் அகன் பெரும் புனல் கங்கை எங்கணும்...''

அதாவது, இடம் அகன்ற அதிகளவு நீரை கொண்ட கங்கை ஆற்றின் எல்லா இடங்களிலும், பெருமை மிக்க கொடிய யானைகளின் மத நீராகிய அருவி பாய்வதனால் எண்ணிக் கணக்கிட முடியாத வண்டுக் கூட்டங்களிற்கும், ஏனைய உயிரினங்களிற்கும் குடிக்கவும், குளித்து மூழ்கவும் உரிமை இல்லாது போய்விட்டது என யானைப்படை வர்ணிக்கப்படுகின்றது. இங்கு யானைகளின் மத நீராகிய அருவி கங்கையாற்றின் எல்லாப் பகுதியிலும் சென்று கலந்தது என உயர்வு நவிற்சியணி வாயிலாக அச் சிறப்பு வெளிப்படுத்தப் படுகின்றது.

அதே போன்று பரதனுடன் வந்த சேனையில் அங்கம் வகித்த குதிரைப் படையின் சிறப்பினை நோக்கும் போது, அக் குதிரைகளின் கால்களில் இருந்து எழுந்த தூளியானது (புழுதி) வானுலகில் உள்ள தேவர் உலகத்தில் புகுந்து அங்கிருந்த தேவர்களின் முடிகளில் படிந்தன. இவ்வாறாக நிலவுலகில் பெருமூசச் விட்டுக் கொண்டு நின்றனவும், நீரைப் பருகியவையும், நீரில் நீந்திக் கொண்டு நின்றனவும், நிலத்தில் புரண்டபடி இருந்தவை அனைத்துமே குதிரைகளின் கூட்டமேயாகும். இதனை,

''நெடிது உயிர்த்து உண்டவும் நீந்தி நின்றவும்
பொடி மிசை புரண்டவும் புரவி ஈட்டமே...''

எனும் பாடலடியின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்

இவ்வாறு பரதனின் எல்லையற்ற சேனையாகிய கடலானது கங்கையாற்றின் நீரினை குடித்தமையால் அக் கங்கையாற்றின் நீர் வழக்கம் போல் சென்றடையும் சமுத்திரத்தை சென்றடையாது போய்விட்டது என அச்சேனையின் எண்ணிக்கையை உயர்வு படுத்தி சிறப்பிக்கின்றார் கம்பர். பரதனுடன் அக் கங்கைக் கரையினை வந்தடைந்த சேனையின் எண்ணிக்கை ஆன்றோரால் கணக்கிட்டுக் கூறும் படியாக அறுபதினாயிரம் அக்ரோணிகள் கொண்டமைந்த பெரும் சேனையாக விளங்கியது என அழகுற கம்பர் எடுத்துரைக்கின்றார்.

ஆ) பரதனின் கணக்கிட முடியாத சேனையைக் கண்ட குகன் அப் படை இராமனுடன் போர் செய்வதற்காகவோ வந்துள்ளது எனக் கருதி மிகுதியாக கோபமடைகின்றான். இத்தகு நிலையினை கம்பர் அழகுற குறிப்பிடுகின்றார். இயமனைப் போன்ற வலிமை பொருந்தியவனாகிய வேடுவர் குலத் தலைவனாம் குகன், பரதனின் பெரும் சேனையை ஒரு தூசியைப் போல நோக்கினான். அப்போது அவனுக்கு இகழ்ச்சியான சிரிப்பு உண்டாகவும், கண்களில் கோபத்தினால் தீப் பொறிகள் தோன்றவும், அக் கோபம் மிகுதியடைந்து மூக்கிலிருந்து புகையாக வெளிவரவும், வளைந்த தன் புருவமாகிய போர் செய்யும் வில்லை உடையவனாக குகன் விளங்கினான். இதனை,

''குகன் எனப் பெயரிய கூற்றின் ஆற்றலான்
தொகை முரண் சேனையைத் துகளின் நோக்குவான்...'' எனும் பாடலடி விளக்குகின்றது.

மேலும், வில் வித்தையில் தேர்ச்சியுடையவனாகிய குகன், இறுதிக் காலத்தில் உயிர்களை எல்லாம் உடல்களில் இருந்து எடுத்துச் செல்லுகின்ற கையில் முத்தலை சூலாயுதத்தை தாங்கிய இயமனே, அழகிய ஐந்து இலட்சம் வடிவங்கள் எடுத்ததைப் போன்று வலிமையான உடலினைக் கொண்ட வேடுவச் சேனையைக் கொண்டவனாக விளங்கினான். அதுமட்டுமன்றி, தன் இடையில் கட்டப்பட்டுள்ள உடைவாளையும், பற்களால் உதட்டைக் கடித்துக் கொண்டிருக்கும் வாயினையும், கடிந்து பேசுகின்ற சொற்களை உடையவனாகவும், கண்கள் விழித்துப் பார்ப்பதனால் தீப் பொறி பறக்கும் தன்மை கொண்டவனாகவும், அடிக்கின்ற உடுக்கையையும், ஒலி செய்யும் ஊது கொம்பினையும் கொண்டு, போரானது அருகில் வந்துவிட்டது என மகிழ்ச்சியடைந்து மேல் எழும்பும் தோள்களைக் கொண்டவனாகவும் குகன் விளங்கினான் என்கின்றார் கம்பர். இதனை

''கட்டிய கரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிக்கும் தீயினன்..'' எனும் பாடலடி விளக்குகின்றது.

அதே போன்று பரதனின் சேனைகள் எல்லாம் எலிகள். நான் அவற்றை தின்றொழிக்கும் பாம்பாவேன் எனக் கூறி நின்றான் குகன். மேலும், வலிமை மிக்க நகங்களைக் கொண்ட புலிகள் எல்லாம் ஓரிடத்தில் ஒன்று கூடியதைப் போல தன் வேடுவ சேனையை ஆரவாரத்துடன் போர் செய்யக் கருதி அழைத்து நின்றான். இவ்வாறாக குகனின் கோபம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

www.ikedu.lk

இ) பரதனது சேனையைக் கண்ட வலிமையான தோள்களைக் கொண்ட குகன் அப்படை இராமபிரானுடன் போர் புரிவதற்காகவே வந்துள்ளது எனக் கருதி, அப்படையுடன் போர் செய்வதற்காக தன் வலிமையான வேடுவர்களைக் கொண்ட வேடுவ சேனையை ஒன்று திரட்டினான். அத்தகைய குகனது படைச் சிறப்பினை பின்வருமாறு எடுத்து நோக்கலாம். உலகில் வாழுகின்ற வன்மையான நகங்களைக் கொண்ட புலிகள் அனைத்தும் ஒரே இடத்தில் ஒன்று கூடியதைப் போல குகனது வலிமையான வேடுவ சேனையானது ஆரவாரத்துடன் போர் செய்வதற்கு ஒன்று கூடியது என்கின்றார் கம்பர். இதனை,

''வலி உலாம் உலகினில் வாழும் வள் உகிர்ப்
புலி எலாம் ஒரு வழிப் புகுந்த போலவே..'' எனும் பாடலடிகள் வாயிலாக அறிய முடியும்.

மேலும், ஊழிக்காலத்தில், இடியோடு கூடிய மேகக் கூட்டங்களும், கரிய கடலும், ஒலி செய்து மிகுதியாக எழுந்ததைப் போல ஒல் என்று பேராரவாரத்துடன் குகனது சேனை ஒன்று சேர்ந்து கங்கையின் தென் கரையில் ஒன்று கூடியது. இதனை,

''அருங் கடை யுகம் தனில் அசனி மா மழை...'' எனும் பாடலடி விளக்குகின்றது.

இவற்றுடன், இறுதிக் காலத்தில், உயிர்களை எடுக்கின்ற, சூலாயுதத்தை தன் கையில் ஏந்திய இயமன், ஐந்து இலட்சம் உருவம் எடுத்ததைப் போல குகனது சேனை வீரர்கள் காட்சியளித்தனர். இவ்வாறாக குகனின் சேனையானது வர்ணிக்கப்பட்டுள்ளது.

ஈ) இப்பகுதியிலே ஆசிரியர் உவமையணி, உருவக அணி, உயர்வு நவிற்சியணி போன்றவற்றைக் கையாண்டுள்ளார். அதனைப் பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.

நீரைச் சுமந்து சூல் கொண்ட கரு மேகம் போன்ற இராமன் திருமேனி – 'நீர் சுமந்த மேகத்தை ஒப்புடை அண்ணல்..'
உவமானம் - நீர் சுமந்த கருமேகம், உவமேயம் - இராமனின் திருமேனி, பொதுத்தன்மை - கருமை,

இயமனை ஒத்த ஆற்றலுடையவனாக குகன் உவமிக்கப்பட்டிருத்தல். – 'கூற்றின் ஆற்றலான்...'
உவமானம் - இயமன், உவமேயம் - குகன், பொதுத்தன்மை - ஆற்றல்

இயமன் ஐந்து இலட்சம் உருவம் எடுத்ததைப் போல குகனது சேனை விளங்குதல் - 'காலன் தான் ஐந்நூறாயிரம்..'
உவமானம் - இயமன் ஐந்து இலட்சம் வடிவெடுத்தல், உவமேயம் - குகனது சேனை
பொதுத்தன்மை - எண்ணற்ற தன்மை

ஊழிக் கால முடிவில் கடலும், மேகமும் கிளர்ந்தெழுந்து ஓசை செய்வதைப் போல குகனின் சேனை ஆரவாரம் செய்தல். – 'கடையுகம் தனில் அசனி மாமழை கருங்கடல் கிளர்ந்தென..'
உவமானம் - கடலும், மேகமும் கிளர்ந்து ஓசை செய்தல், உவமேயம் - குகனது சேனை ஆரவாரம் செய்தல்
பொதுத்தன்மை - ஆரவாரம். போன்ற உவமையணிகளைக் குறிப்பிடலாம்

வெங்கரி மதத்து அருவி - யானையின் மத நீர் அருவியாக உருவகிக்கப் பட்டுள்ளது
சேனையாம் வேலையே – சேனை கடலாக உருவகிக்கப் பட்டுள்ளது
புருவப் போர்விலான் - புருவம் போர் வில்லாக உருவகிக்கப் பட்டுள்ளது. போன்ற உருவக அணிகளைக் குறிப்பிடலாம்

பரதனின் சேனையில் உள்ள யானைகளின் மதநீரானது கங்கையில் எங்கும் ஓடி பரவுதல், பரதனின் சேனையில் உள்ள குதிரைகளின் காலடித் தூசி தேவர் உலகில் சென்று படிதல், பரதனின் சேனையாகிய கடல் கங்கையாற்றில் வியாபித்தல். அதாவது கங்கையாற்றை குடித்துவிடல், பரதனின் சேனை அறுபதினாயிரம் அக்ரோணி எண்ணிக்கை கொண்டிருந்ததாக கூறுதல். போன்ற உயர்வு நவிற்சியணிகளையும் குறிப்பிடலாம்.

05. இலங்கையாற்றுப்படை - கட்டுரை

அ) இராமாயணத்தில் குறிப்பிடப்படும் இலங்கை அல்லது இலங்காபுரி என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து பேதங்கள் காணப்படுகின்றன. இராமாயணத்தில் குறிப்பிடப்படும் இலங்கை உண்மையில் எமது நாட்டைக் குறிக்கின்றதா? அல்லது சிலர் கூறுவது போன்று வேறு ஒரு நாட்டைக் குறிக்கின்றதா? என்ற விவாதங்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பதாக இக்கட்டுரையின் முக்கிய விடயப் பொருள் அமைகின்றது.

இதற்கு ஆசிரியர் பல்வேறு ஆதாரங்களைக் கொண்டு தீர்வினை முன்வைக்கின்றார். அந்தவகையிலே இலங்காபுரி, இலங்கையையே குறிக்கின்றது என்பதனை இலங்கையின் நிலவியல், இடப்பெயர் மற்றும் இந்திய துணைக் கண்டத்தின் இடப்பெயர் ஆகியவற்றின் ஊடாகவும், இலக்கியச் சான்றுகள், பிறநாட்டார் குறிப்புக்களினூடாகவும் தர்க்க ரீதியாக உதாரணம் காட்டி நிறுவியிருக்கின்றார்.

ஆ) இராமாயணம் முழுவதும் கட்டுக்கதை என்ற கொள்கை உடையவர்களும் இக்காலத்திலே உள்ளனர். அவர்கள் இராமாயணத்தில் கூறப்பட்ட இலங்கையினை ஒரு கற்பனை நாடாகக் கருதுவர். அந்தவகையிலே இராமாயணம் குறிப்பிடும் இலங்கை எமது நாடல்ல என்போரின் கருத்துக்களை பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.

ஜக்கோபி (Jakobi) என்பவர் ஜேர்மன் பாஷையில் ஓர் ஆராய்ச்சி நூல் எழுதியவர். சீதை என்ற சொல் உழவு சால் எனப்பொருள்படும். எனவே, இராமாயணம் உழவுத் தொழிலை உருவகப்படுத்துவதற்கு எழுந்த காவியம் எனக் கூறுகின்றார்.

வேறு சில ஆராய்ச்சியாளர்கள் வட இந்தியாவிலிருந்து ஆரியர் விந்திய மலைக்கு தெற்கே பரவிய வரலாற்றை இராமாயணம் விளக்குகின்றது என்பர்.

இது தொடர்பான ஆராய்ச்சியாளர்கள் சிலர் இராமாயணத்தில் கூறப்பட்ட இலங்கை இந்தியாவிற்கு அப்பால் வெகு தூரத்தில் உள்ள ஜாவா, சுமத்திரா பிரதேசம் என்பர்

வேறு சிலர் சர்தார் கீபே (KIBE) என்பவரைப் பின்பற்றி இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் இலங்கை இருந்ததாகக் கருதுவார். சமுத்திரம் இல்லாத இடத்தில் இலங்கை இருந்ததாக சர்தார் கீபே கருதுவார்.

இ) இராமாயணம் கூறும் இலங்கை எமது நாடுதான் என்பதனை ஆசிரியர் பின்வரும் இலக்கியச்சான்றுகளைக் கொண்டு நிறுவுகின்றார்.

சிலப்பதிகாரம் - சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டுள்ள கஜபாகு மன்னனின் குறிப்புக்கள். 1800 ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட சிலப்பதிகார காவியத்தில் இப்போதைய இலங்கைத் தீவினை ஆண்ட கஜபாகு மன்னனை 'கடல் சூழிங்கை கஜவாகு' எனக் கூறியுள்ளமை.

மகாவசம் - கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து இலங்கையின் சரித்திரத்தைத் தொடர்ந்து கூறும் வரலாற்று முதல் இலக்கியமான மகாவசம்சத்தில் காணப்படும் குறிப்புக்கள். ஆதி முதல் அந்தம் வரை 'இலங்கை' என்று அழைக்கப்படும் செய்தி. தலைநகரமாகிய இலங்காபுரி மலைப் பிரதேசத்தில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளமை. வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த விஜயன், அன்றைய இலங்கையிலிருந்தே யவனர்களின் (இயக்கர்களின்) இளவரசியான குவேனியை மணந்த செய்திகள். தேவநம்பிய தீசன் அனுராதபுரத்தில் கட்டிய விகாரைகள் தொடர்பான குறிப்புக்கள்.

வான்மீகி இராமாயணம் - இலங்காபுரியை அடைந்து சீதையைக் கண்டு மீண்ட போது, அரிட்ட பர்வதத்தில் சிறிது தங்கியதாக வான்மீகி கூறுகின்றார். திரிகூட பர்வதம் என்கிற மலையின் உச்சியில் விளங்கிய இலங்காபுரியை இராவணன் தனது தலைநகராகக் கொண்டிருந்தமை பற்றி இராமாயணம் கூறியுள்ளமை (திரிகூடபர்வம் இலங்கையிலுள்ளதற்கு ஆதரங்கள் காணப்படுகின்றன). இராவணன் வாழ்ந்த இடம், பாண்டிய நாட்டிற்கு எதிரில் இருத்ததாகச் சுக்ரீவன் தனது சேனை வீரர்களுக்குக் குறிப்பிட்டதை, வான்மீகி இராமயணத்தின் கிஷ்கிந்தா காண்டத்தின் 41ஆம் சர்க்கம் கூறியுள்ளமை. இராமருடைய சேனை, தென் சமுத்திரக் கரையோரமாக வருவதை இராவணன் இலங்காபுரியிலிருந்து பார்த்தானென இராமாயணம் கூறியள்ளமை.

கம்பராமாயணம் - வான்மீகியைப் பின்பற்றிக் கம்பரும், தமது இராமாயணத்தில், பாண்டியரின் பழைய தலைநகரமாகிய கபாடபுரத்தையும், அதனோடு தொடர்புடைய மகேந்திரமலையையும், பின்னர் 'கடலையும் காண்பீர்' எனக் கூறியுள்ளமை.

சம்புராமாயணம் - கம்பர் காலத்துக்கு ஏறக்குறைய நூற்றாண்டுகளுக்கு முன்னர் வடமொழியில் பாடப்பட்ட சம்புராமாயணம் இலங்கையை 'சிம்ஹளத்வீபம்' என்றே வெளிப்படையாகக் கூறகின்றது.

அகனானூறு - இராமர் சேனை பாண்டி நாட்டைச் சார்ந்த சேதுவழியாகத்தான் சென்றது என்றும் சங்க இலக்கியமான அகனானூற்று 70 ஆம் பாடலில் இராமர் பாண்டி நாட்டைச் சார்ந்த தனுஷ்கோடிக்கு அருகிலுள்ள இராமேஸ்வரத்தில் ஓர் ஆலமரத்தின் கீழிருந்து இரகசிய ஆலோசனை செய்ததாகக் கூறியுள்ளமை.

சம்பந்தருடைய இராமேசுவரம் பதிகம் - தனுஷ்கோடிக்கு அருகேயுள்ள இராமேஸ்வரத்தில் இராமர் இலங்கை செல்வதற்கு சிவபெருமானை வழிபட்டமை பற்றிய ஐதீகத்தைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் (கி.பி 7ஆம் நூற்றாண்டில்) தேவாரத்தில் பாடியுள்ளமை.

மாணிக்கவாசக சுவாமிகள் - சேது நாட்டில் இருந்த மகேந்திரமலை பற்றியும் அங்குள்ள திருவுத்தரகோச மங்கையில் சைவ ஆகமம் வெளியிடப்பட்டது பற்றியும் மாணிக்கவாசக சுவாமிகள் பாடியுள்ளமை.

ஈ) ஆசிரியர் இக்கட்டுரையிலே சிறப்பான மொழிநடையினைக் கையாண்டுள்ளார். அதனைப் பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.

ஆற்றுப்படை என்ற தலைப்பில் வழிபப்டுத்தும் வகையில் கட்டுரைக்கு பொருத்தமான தலைப்பு இட்டுள்ளமை

பண்டிதர் முதல் படித்த பாமர மக்கள் வரையும் இலகுவில் விளங்கிக் கொள்ளும் வகையில் எளிமையான மொழிநடையினைக் கையாண்டு தமிழுக்குரிய தனித்துவம் கெடாத வகையில் யாத்துள்ளார்.

இலக்கண அமைதியினைக் கையாண்டு கட்டுரையினைப் படைத்துள்ளார்.

தன்னுடைய கருத்தினை நிறுவுவதற்கு உரிய சான்றுகளைக் கையாண்டுள்ளார்

பிற நாட்டவரின் வரலாற்றுக் குறிப்புக்களை புராண இதிகாச இலக்கியங்களை அதில் தேவையான விடயங்களை ஆதாரமாக காட்டி கட்டுரையினை அமைத்துள்ளார்.

பொருட் செறிவு மிக்க சிறு சிறு வாக்கியங்களை கையாண்டு எழுதியுள்ளார்

பிற நாட்டு அறிஞர்களின் பெயர்களையும், பிற மொழியில் கொடுக்க வேண்டிய சொற்களையும் ஆங்கிலத்தில் கொடுத்து வடிவமைத்துள்ளார்

06. இரு துயரங்கள் - நாடகம்

அ) இரு துயரங்கள் நாடகத்தின் பேசு பொருளினை வெளிப்படுத்தும் விதத்தினை பின்வருமாறு எடுத்து நோக்கலாம்

இரு துயரங்கள் - கந்தப்புவின் பிள்ளையின் அகால மரணம், மனோகரனின் மனைவி கள்ளக் காதலனுடன் ஓடிப் போன துயரம் ஆகிய இரண்டு துயரங்களும் இரு பாத்திரங்களின் மூலமாகச் சித்திரிக்கப்படுகின்றன. ஒவ்வொருவர் துயரமும் அவரவர்க்கு வலிதானது. இது குறைவானது அது மேலானது என வாதாட முடியாது. ஒருவர் துயரத்தை மற்றவர் பரிவுடன் விளங்கிக் கொள்ளுமிடத்து, அதன் தாக்கம் குறையலாம். சினம் கொண்ட மனம் வீண் விவாதங்களையே வளர்த்துக்கொள்ளும்.

பொருத்தமான களத்தைத் தெரிவு செய்துள்ளமை - இருவரது வீடு

பொருத்தமான பாத்திர உருவாக்கத்தைக் கையாண்டுள்ளமை - டொக்கடர் கந்தப்பு, மனோகரன்

தான் எடுத்துக்கொண்ட விடயத்துக்கு ஏற்ற மொழி நடையைப் பயன்படுத்தி உள்ளமை - யாழ்ப்பாண உயர் வர்க்க உரையாடல்

அணிப்பிரயோகம் இடம்பெற்றுள்ளமை – உவமை அணியினைக் கையாண்டுள்ளமை

பொருத்தமுறப் பேச்சுவழக்கு, பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளமை - யாழ்ப்பாண பேச்சுவழக்கு, இயல்பான ஆங்கில மொழிப் பேச்சு

நாடகத்துக்குரிய பண்புகள் பிசகா வண்ணம் நாடகத்தை எழுதியுள்ளமை - நெறியாளரின் அறிமுகக்குறிப்புடன், இறுதித் தீர்ப்பினை பார்வையாள வாசகரிடமே கையளித்தமை, ஒலி, ஒளி, காட்சியமைப்பு, மேடைப்பொருட்கள் போன்றன பாத்திரங்களின் அறிமுகத்திற்கு உதவியமை

ஆ) இருதுயரங்கள் நாடகத்தின் பிரதான பாத்திரங்களில் ஒருவராக டொக்டர் கந்தப்பு விளங்குகின்றார். அவர் நாடகத்திலே பெறும் முக்கியத்துவம், அவருடைய குணயியல்புகள் என்பன பற்றி பின்வருமாறு எடுத்து நோக்கலாம்

பிரபல்யமான வைத்தியர், சிறந்த வைத்தியருக்குரிய மன இயல்புடையவர். ''வைத்திய தர்ம விதி பதிமூண்டாம் புத்தகத்தின் முதலாம் பிரமாணப்படி என்ரை கழுத்தைப்பிடிச்சு இழுத்துக்கொண்டு போறத்துக்கு உமக்கு உரிமை இருக்குது'' என்பதனைக் குறிப்பிடலாம்.

தன் மனைவி பிள்ளை தவிர வேறு உறவுகள் இல்லாதவர். ''இஞ்சை மனிசருக்குத் துணையாக விட்டிட்டு வாறத்துக்கும் ஒருவரும் இல்லை'' என்பதனைக் குறிப்பிடலாம்.

பிள்ளைப்பாசம் மிக்கவர். அதாவது தன் பிள்ளை இறந்து போனதால் விரக்தியுற்ற மன நிலையில் காணப்படுவதுடன், பிள்ளையின் இழப்பை ஜீரணிக்க முடியாதவராக ஜடம் போல தன் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார். அவை அர்த்தமற்ற செயற்பாடுகளாகத் தோன்றுகின்றன.

தன் மகனின் மரண வலியில் துவளும் ஒருவராக காணப்படுகின்றார். அதாவது கழுத்தைப்பிடித்து இழுத்துக் கொண்டு போனாலும் தன்னால் எந்த வேலையும் செய்ய முடியாதென தன் வலியை மனோகரனிடம் வெளிப்படுத்துகின்றார்.

தனது துன்பத்தைப் பார்த்தாலும் பிறர் துயரையும் உணரும் மனோபாவம் கொண்டவர். மனோகரனது துயரை உணர்ந்து தன் துயரைப் பொருட்படுத்தாது மனோகரனின் மனைவிக்கு வைத்தியம் பார்க்க அவனுடன் சென்றவர்.

அவமானத்தை தாங்கிக் கொள்ள முடியாதவர். மனோகரனின் மனைவி வீட்டில் இல்லாததால் மனோகரன் புலம்பும் போது தனக்கு அவமானம் நேர்ந்து விட்டதென்ற உணர்வால் மனம் குமுறியவர்.

ஒழுக்கங் கெட்ட நடத்தைகள், நடவடிக்கைகளை வெறுப்பவர். மனோகரனின் மனைவியின் செயற்பாட்டை அருவருப்புடன் பார்ப்பது இதனைப் புலப்படுத்தும்.

சற்று கோபமுடையவராக விளங்குபவர். மனோகரன், தன் மனைவி பாமா வேறொருவனுடன் ஓடிவிட்டாள் எனக் குமுறிக் கொண்டிருக்க தன் துயரை அறியாது இவன் புலம்புகின்றானே எனக் கோபம் கொண்டு மனோகரனை ஏசியவர்.

பண ஆசை இல்லாதவர். மனோகரன் பணங்கொடுக்க அதனைக் கிழித்தெறிந்து அவன் மீது அளவற்ற கோபம் கொண்டு அங்கிருந்து வெளியேறியவர்.

இவ்வாறான பண்புகளைக் கொண்ட ஒரு பாத்திரமாக டொக்டர் கந்தப்பு படைக்கப்பட்டுள்ளார்.

இ) இரு துயரங்கள் நாடகத்திலே இ.முருகையன் சிறப்பான மொழிநடைச் சிறப்பம்சத்தினைக் கையாண்டுள்ளார். அதனைப் பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.
அன்ரன் செக்கோவ் எழுதிய சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு மேடைநாடக வடிவில் படிப்பதற்கும் நடிப்பதற்குமாக தயாரித்து வழங்கியமை.
சுவையான முறையில் இரண்டு காட்சிகளாக நாடகத்தை உருவாக்கி நெறியாளரே முதலில் மேடையில் ஏறி நாடகத்தை அறிமுகஞ்செய்து, நாடக முடிவிலும் தோன்றி நாடகத்தை முடித்து வைத்த உத்தி.
பொருத்தமான களத்தைத் தெரிவு செய்து கதையை நகர்த்தியமை கந்தப்புவின் வீடும் அதன் இருபக்கப்பிரிவுகளும், மனோகரனின் வீட்டில் வரவேற்பறையும் மாடிக்கான படிகளும்.
பொருத்தமான பாத்திர உருவாக்கத்தைக் கையாண்டுள்ளமை. அந்தவகையிலே கந்தப்புவின் பிள்ளையின் அகால மரணம், மனோகரனின் மனைவி கள்ளக் காதலனுடன் ஓடிப் போன துயரம் ஆகிய இரண்டு துயரங்களும் இருபாத்திரங்களின் மூலமாகச் சித்தரிக்கப்படுகின்றன.
தான் எடுத்துக்கொண்ட விடயத்துக்கு ஏற்ற பொருத்தமான மொழி நடையைப் பயன்படுத்தி உள்ளமை. ''மனிசத்தன்மை அது இரண்டு புறமும் கூருள்ள ஆயுதம்'', ''அப்படியெண்டால் என்ரை அந்தரம் இப்ப உங்களைத்தவிர ஆருக்குத்தான் விளங்கும்'', ''ஏன் இந்தப் பசப்பும் பாசாங்கும் ஏனிந்த சூதும் சதியும் கைகேகித்தனமும்''
பொருத்தமுற யாழ்ப்பாணப் பேச்சு மொழிப்பிரயோகம் கையாளப்பட்டுள்ளமை. ''வேணுமெண்டால் உம்மிடை வீணையை எடுத்து கருணாரசம் ததும்ப ஒரு கீர்த்தனையை பிடுங்கி எறியும்'', ''உம்மிடை கூத்து மேடைக்குப் பந்தல் காலாய் நிண்டு சுமக்கச் சொல்லுறீர்''
நாடகத்துக்குரிய பண்புகள் மாறாத வண்ணம் நாடகத்தை எழுதியுள்ளமை. கதைக்கரு, நாடகப்பாத்திரம், கால அளவு, கட்டமைப்பு, காட்சி அமைப்பு, தொடக்கம், குறிப்பு, வசனம், முரண்பாடுகள், முடிவு, தலைப்பு, உத்திகள் என்று பல கூறுகள் அமைக்கப்பட்டுள்ளன.
நாடக முடிவில் இரு கதாபாத்திரங்களின் துயரங்களும் பற்றிய நீதித்தீர்ப்பினை நாடகம் பார்ப்போரே தீர்மானிக்கத்தக்கதான விதத்தில் அமைத்தளித்தமை.
பிரதான பாத்திரங்களின் யதார்த்தமான உரையாடல்களில் துயரம், ஏக்கம், ஆற்றாமை, பணிவு, ஏமாற்றம், சினம் ஆகிய உணர்ச்சிகள் வெளிப்படுமாறு பயன்படுத்தியமை.
பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளமை இயல்பான ஆங்கில மொழிப்பிரயோகம். டொக்டர்,கார்,மிஸ்டர்,அனூறிசம்
குறியீட்டு முறையில் நாடகம் ஆரம்பிக்கப்பட்டு நகர்த்தப்பட்டுள்ளமை
உவமையணிப்பிரயோகம் கையாளப்பட்டுள்ளமை.

07. கோயிற் திருப்பதிகம்

அ) தன்னை ஆட்கொள்ளும் சிவபெருமானைப்பற்றி மாணிக்கவாசகர் பின்வருமாறு எடுத்துக் கூறுகின்றார்.
மெய்ப்பொருளை பொய்ப்பொருளாய்க் காட்டும் வஞ்சகப் புலன்களின் வாசனையை நீக்கி என்னுள் அமுத ஊற்றாய் எழுகின்ற பரஞ்சோதியாய் விளங்குகின்றவர்
யான் உன்மீது கொண்ட பேரன்பினால், அடியேனுடைய ஊனும் உயிரும் ஆனந்தமாய்க் கசிந்துருக என் தகுதிக்கு மேலான இனிய அருட்செல்வத்தை தந்தருளினாய்
எனது உயிருடன் உடலிலுள்ள எலும்பின் உட்துளை எல்லாம் நெகிழக் கூடியதாய் உட்புகுந்து நின்று உருக்கினாய்
எனைப் பிறப்பறுக்கும் அருமருந்தாய் விளங்குகின்றாய்
மறையுமாய், மறையின் பொருளுமாய் வந்து என் மனத்திடையே நிலை பெற்றுள்ளாய்
கரையற்ற வெள்ளம் போன்று என் சிந்தையினூடு அருள் வெள்ளமாய்ப் பாய்கின்றாய்
என் உடலினை உனக்குரிய இடமாகக் கொண்டு தங்கினாய்
இரந்து இரந்து உருக என் மனத்துள் எழுகின்ற சோதியானாய்
யான் உனைக் கண்ணாரக் கண்டு களிப்படையச் செய்தாய்
தெளிவடைந்த என் மனத்தினுள் உன் அருள் வெள்ளமானது இனிமை தருமாறு நிறைந்தாய்
என்னை விட்டு அகலாதபடி யான் உன்னை சிக்கனப் பிடித்துள்ளமையால் உன் திருவடிப்பேற்றினை அருளுமாறு வேண்டச் செய்தாய்
எல்லையில்லாத பரமானந்தம் எனக்களித்தாய்
இறைவனாகிய உன்னையே எனக்குத் தந்தருளி சிறியவனாகிய என்னை நீ ஏற்றுக் கொண்டாய்.

ஆ) கோயிற்திருப்பதிகத்திலே வெளிப்படும் சிவபெருமானின் சிறப்புக்கள், பெருமைகளை பின்வருமாறு எடுத்துரைக்கலாம்.
தெளிந்த தேன் போன்றவன்
திருப்பெருந்துறையில் கோயில் கொண்டிருப்பவன்
முடிவற்ற கதிகள் அனைத்தையும் கடந்தவன்
அடியவர் அன்புக்குரியவன்
அமுத ஊற்றாய் விளங்குபவன்.
எல்லாவற்றிலும் முன், பின் என வியாபித்திருப்பவர்
சிவலோகத்தின் அரசனாக விளங்குபவன்
அன்பர்களுகக் தலைவனாக விளங்குபவன்
ஆனந்தக் கடல் போன்றவன்
முனிவர்கள், தேவர்கள், முதலியோரின் உணர்வுக்கு எட்டாதவர்
எல்லா உயிர்களின் உயிரானவன்
பிறவிப் பிணியை நீக்கியருள்பவன்
இருளில் தெளிவாக விளங்கும் தூய ஒளி போன்றவர்
குணங்கள் இல்லாத ஆனந்த வடிவானவர்
வேதமாகவும் அதன் பொருளாகவும் விளங்குபவர்
ஐம்பூதங்களாகவும், அதற்கு அப்பாலும் கடந்திருப்பவர்
தேவர்கள் தலை மீது விளங்கும் திருவடியை உடையவர்
நிலம், சுவர்க்கம், அண்டம் என்பவற்றில் தோன்றி பரவி நிற்பவர்.
இவ்வாறான சிறப்புக்களை
''முன்புமாய் பின்பு முழுதுமாய்ப் பரந்த முத்தனே முடிவிலா முதலே..''
''அரசனே அன்பர்க்கு அடியனே..''
''அமுதத்தென் கடலே திருப்பெருந் துறையுறை சிவனே..''
''குறைவிலா நிறைவே கோதிலா அமுதே..'' எனும் பாடல் வரிகள் வாயிலாக விளங்கிக் கொள்ளலாம்

இ) மாணிக்கவாசகர் இறைவன் மீது கொண்டுள்ள பக்தியின் வெளிப்பாட்டினை பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.
இறைவனின் இயல்புகளையும் பெருமைகளையும் வியந்து பாடுதல்
இறைவன் தன்னை ஆட்கொண்ட விதங்களை வெளிப்படுத்துதல்
இறைவனின் அரிய குணங்களை பக்திச் சுவை பெருக கூறுதல்
இறைவன் தனக்கு உதவிய தன்மைகளை பாடுதல்
இறைவன் மீது தான் வைத்துள்ள பக்தியையும், அன்பினையும் பாடுதல்
இறைவனின் பெருங் கருணைக்கு தான் கைம்மாறு செய்ய எதுவும் இல்லையே என வருத்தப்படல்
இறைவனால் தான் ஆட்கொள்ளப்பட்டமையால் தனக்கு உண்டான பெருமிதத்தை பாடுதல்
இறைவனைச் சிக்கனப் பிடித்த தன் செயல்களை பக்தியுடன் வெளிப்படுத்தியமை

ஈ) கோயிற் திருப்பதிகத்திலே மாணிக்கவாசகர் சிறப்பான மொழிநடைச் சிறப்பம்சத்தினை கையாண்டுள்ளார். அவற்றை பின்வருமாறு எடுத்து நோக்கலாம்
இறைவனுடன் ஆண்மா இரண்டறக் கலக்கும் சுத்தாத்துவ நிலையின் அடிப்படையில் பாடல்களைப் பாடியுள்ளமை
பக்தியின் சுவை வெளிப்படக் கூடிய வகையிலே பாடல்கள் பாடப்பட்டுள்ளமை
அணிப்பிரயோகங்களைக் கையாண்டு பதிகத்தினை படைத்துள்ளமை
சந்தத்தோடும் இசையோடும் பாடக்கூடிய வகையிலே பாடல்கள் அமையப் பெற்றுள்ளமை
ஆண்டான் அடிமை நிலையில் இருந்து இறைவன் ஆண்மாவின் தொடர்பினை விளக்கியுள்ளமை
சொல்லலங்காரம் ஓசை நயமிக்க சொற்களைக் கையாண்டுள்ளமை
பத்துப்பாடல்களைக் கொண்ட பதிக அமைப்பில் பாடல்கள் பாடப்பட்டுள்ளமை
அந்தாதித் தொடையில் அமைந்து பக்தி மனம் கமழும் பாடல்கள் அமையப் பெற்றுள்ளன.

08. அ) மணிமேகலை

மணிமேகலையில் அந்திமாலைப் பொழுதின் வர்ணனையினை சித்திரித்துக் காட்டுவதற்கு ஆசிரியர் பல்வேறு உத்திமுறைகளைக் கையாண்டுள்ளார். அவற்றினை பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.
புலவர் மாலைப்பொழுது காட்சியை விபரிக்க அணிகளை கையாண்டுள்ளார். மாலையில் சந்திரன் உதயமாவதையும் சூரியன் மறைவதையும் புகார்ப் பெண் ஆனவள் வெள்ளியால் ஆன வெண் தோட்டோடும் பொன்னாலான தோடுடனும் பொலிவுடன் விளங்குகிறாள் என்று தற்குறிப்பேற்ற அணியும் உருவக அணியும் அமைய விளக்குகிறார்.
பறவைகளின் மாலைப் பொழுது செயற்பாடுகளை நயத்துடன் எடுத்துக் கூறல். அதாவது மாலையிலே அன்னப்பறவை மகிழ்ந்து விளையாடின அன்னப்பறவையில் பெண் ஆனது தாமரையில் இருக்க தாமரை இதழ் மூடிக்கொள்கிறது. இதனை கண்ட அன்னச் சேவல் தாமரை இதழ் சிதையுமாறு கிழித்தெறித்து தன் அன்னப் பேடையை மீட்டெடுத்து உயர்ந்த தென்னையில் உள்ள மடலிலே இருக்கும். பெண் அன்றில் மாலையிலே தனது மெல்லிய குரலிலே தனது சேவலை அழைத்து சூரியன் மறையும் செய்தியை கூறுகிறது.
விலங்குகளின் இயல்பான செயற்பாடுகளை கவித்துவத்துடன் கூறுதல். அதாவது மாலைப் பொழுதிலே அன்னங்கள் நிறைந்த சோலையில் குவளை மலர்களை மேய்ந்து திரண்ட கண்களை கொண்ட சிவந்த பசுக்கள் தாம் செல்லும்போது உண்டாகும் புழுதியை தமது மடியில் இருந்து பொழியும் பாலினால் அடக்கி தனது கன்றின் நினைவு வர தொழுவத்தை நோக்கி விரைந்தது.
மனிதர்களின் மாலை நேர செயற்பாட்டைக் காட்டுவதனூடாக புலவர் மாலைக் காட்சியை வர்ணனை செய்துள்ளார். அதாவது அந்தணர்கள் மாலையில் செய்யும் யாகத்திற்காக நெருப்பை வளரத்தார்கள். பெண்கள் மாலை வேளையில் விளக்கு ஏற்றினார்கள். யாழ் இசைப்போர் யாழிலே நரம்புகளை தடவி மருதப் பண்ணை இசைத்தார்கள். கோவலர்கள் புல்லாங்குழலிலே முல்லைப் பண்ணை இசைத்தார்கள். இவ்வாறான உயர்திணை பொருள்கள், அ.்.றிணைப் பொருள்களின் இயல்புகள் ஊடாக மாலைக்காட்சியின் வர்ணனைகளை இங்கே காணலாம்.
ஆசிரியர் சிறந்த ஓசை வளத்தை கையாண்டு மாலை பொழுதை வர்ணனை செய்கிறார். அதாவது மாலையில் சந்திரன் உதயமாவதையும் சூரியன் மறைவதையும் ''குண திசை மருங்கின் நாள் முதிர் மதியமும் குடதிசை மருங்கின் சென்று வீழ் கதிரும்'' என ஓசை நயத்தை கையாண்டு வெளிப்படுத்தியுள்ளார்.
கற்பனை செழுமையை கையாளல். அதாவது மாலையில் சூரியன் மறையும் காட்சியை போர்க்களத்தில் போர் புரிந்து வீரன் இறப்பதாக காட்டியுள்ளமையும் காதலனது பிரிவினால் பசலை நோய் தோன்ற மாலை பொழுதானவள் காட்சியளித்தாள் என்று கூறியுள்ளமை கற்பனை நயம் பயப்பதாக அமைகிறது.
அந்திப் பொழுது ஏற்படுத்தும் துன்ப உணர்வினை இரசனையான முறையில் வெளிப்படுத்தல் போர்க்களத்தில் கணவனை இழந்தவள் எவ்வாறான உணர்வோடு சுற்றத்தார் வீட்டிற்கு செல்வாளோ அது போன்ற துன்ப உணர்வோடு மாலைக் காட்சி பற்றிய விபரிப்பைக் காட்டுகிறார்.

ஆ) உதயச்சூரியன்

உதயச் சூரியன் வருகையினால் இயற்கையிலும் மனிதர்களிடத்தேயும் பல்வேறு மாற்றங்களும் விளைவுகளும் ஏற்படுகின்றன. அவற்றினை பின்ருமாறு எடுத்து நோக்கலாம்.
உலகமிசை உணர்வு எழுப்புதல்
சோம்பல் விலக்குதல்
தூக்கத்தில் ஆழ்ந்த உலகம் எழுப்பி நடத்தல்
மக்களின் மனதில் மகிழ்ச்சி ஏற்படல்
கவிதைத் தொழில்கள் அரும்புதல்
மக்கள் எல்லா திசைகளிலும் அறிவைப் பெறுதல்
வானம் தகதகத்தல், விண்ணெல்லாம் பொன்னொளி மின்னுதல்
காரிருள் அகல்தல்
கடல் பொங்கி ஆர்ப்பரித்தல், பிரவாகித்தல், ஒளிமயமாதல்
வான், மண், மலை, சோலை, நதி என்ற இயற்கை அம்சங்கள் அனைத்திலும் ஒளி பரவுதல், அழகு பொலிதல்

இ) தேர் - சிறுகதை

தேர் சிறுகதையில் வெளிப்படும் யாழ்ப்பாண பண்பாட்டு அம்சங்களைப் பின்வருமாறு எடுத்து நோக்கலாம்
பாயில் நித்திரை செய்தல்
காலைக்கடன்களைக் கழிக்க கொல்லைப்புறம் செல்லல்
சுருட்டுப்புகைத்தல்
உமிக்கரியால் பல்லை துலக்குதல்
காலையில் முகம் கழுவி விபூதி தரித்தல்
வெண்சங்கில் விபூதி வைத்துத் தொங்கவிடல்
நேர்த்திக்கடன் நிறைவேற்றல்
மயிர் நீக்கக் கடன் செய்தல்
நீற்றுப் பெட்டியில் பிட்டு அவித்தல்
நல்லெண்ணெயில் கத்தரிக்காய் பொரித்தல்
பெண்பிள்ளைகளை அதிகம் படிக்கவிடாதிருத்தல்
சாம்பல் போட்டுப் பொச்சு மட்டையால் உரசிப் பாத்திரங்கள் கழுவுதல்
புதுவருடப்பிறப்பன்று பழைய கறிகளை பாத்திரங்களில் இருந்து அப்புறப்படுத்தல்
புதுவருடப் பிறப்பன்று கைவியளம் கொடுத்தல்
புதுவருடப் பிறப்பு கொண்டாட்டத்தில் குடும்பங்கள் அனைவரும் இணைந்திருத்தல்
புதுவருடப்பிறப்பன்று நீராடி, புத்தாடை அணிந்து, குங்குமம் வைத்தல்
முட்டைக் கோப்பி குடித்தல் இறைச்சி, மீன் சாப்பிடல்
காசு வைப்பதற்காக மடிஞ்சைப் பயன்படுத்தல்
கழுத்தினச் சுற்றியதாக சால்வை அணிதல்
பஞசாங்கம் பார்த்தல், சாமத்தியக் கல்யானம் செய்தல்
நாடகங்கள் நடித்தல்
போர்த்தேங்காய் அடித்து விளையாடல்
திருமணப்பேச்சுக்கள் நடைபெறல்

ஈ) தமிழ்த்தொண்டு

சுவாமி விபுலானந்தர் தமிழ்த்தொண்டு எனும் கட்டுரையில் உத்தமக் கவிகள் பற்றிக் கூறுவனவற்றைப் பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.
வாழ்க்கையின் இரகசியங்களை ஊடுருவி நோக்கும் ஆற்றல் உத்தம கவிகளிடையே உள்ளன.
கலைமகளின் அருளைப்பபெற்ற இவர்கள், தமிழின் சிறந்த நூல்களைக் தெளிவுறக்கற்று அதன் வழியே வாழ்பவர்கள்.
உத்தமக் கவிகளது கருத்துக்கள் உண்மை வழி நின்று வாழ்க்கையின் உயர்நிலை அடைய உதவும்.
கலைமகளிடம் கடாட்சம் பெற்ற இவர்கள் படைத்தற் கடவுளான பிரம்மாவைப் போல புதிய புதிய கருத்துக்களை வடிவங்களை உருவாக்கும் வல்லமை படைத்தவர்கள்.
இவர்களது நோக்கம் உயர்வடையும்போது செயல் உயருகிறது. செயல் உயர்வடைய வாழ்க்கையும் உயர்வடைகிறது. மாறும் சமூக நிலைக்கேற்ப பலதேசத்திற்கும் பொருத்தமான உண்மைக்கருத்துக்களை எடுத்துச் சொல்லும் ஆற்றல் இவர்களுக்குள்ளது.
உத்தம கவிஞர்களது பாடல்கள் நாட்டிற்கு புத்துயிர் அளிக்க வல்லன.

உ) குயிற்பாட்டு - பாரதியார் கவிதை

குயிற்பாட்டு எனும் கவிதையில் பாரதியாருக்கு இசை மீது இருந்த ஈடுபாட்டினை பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.
குயிற் பாட்டு எனும் கவிதையில் பாரதியாரின் நெஞ்சை கவர்ந்த இசையினை

1. இயற்கை ஓசைகள்
2. நாட்டு புறவியல் இசை
3. இசைக் கருவிகள் இசை என வகைப்படுத்தி நோக்கலாம்.

பாரதி, இயற்கை ஓசைகளில் மனதை பறிகொடுத்தார். அதாவது, இனிய ஓசை எழுப்பும் பறவைகளின் இனிய குரல், காற்று மரங்களில் மோதி வரும் இசை, ஆற்று நீரோசைகளின் அருவி, நீல பெருங்கடலின் அலை ஓசை ஆகிய இயற்கை ஒலிகளை இசையின் இன்பமாக பாரதி காணுகிறார். இது பாரதிக்கு இயற்கை ஓசைகளின் மீது இருந்த ஈடுபாட்டைக் காட்டுகிறது.
நாட்டுப் புறவியல் இசைகளிலும் பாரதி தனது மனதை பறி கொடுத்தார். அவ்வகையில், மானிடப் பெண்கள் காதலினால் பாடுகின்ற பாடல் ஓசை, ஏற்ற நீர் இறைக்கும் ஓசை, நெல்லிடிக்கும் பெண்களின் குக்கு என கொஞ்சும் குரல் ஓசை, சுண்ணம் இடிப்பாரது சுவை மிகுந்த ஓசை, பண்ணையில் வேலை செய்யும் பெண்கள் பாடும் இசை, கும்மி பாடலின் போது வரும் இசை என்பவற்றிலும் இசை இன்பத்தைப் தரிசிக்கிறார். இது நாட்டுப்புறவியல் இசைகளில் பாரதிக்கு இருந்த ஈடுபாட்டை வெளிப்படுத்துகிறது.
கருவி வழியாக வரும் இசையிலும் பாரதி மனதைப் பறிகொடுக்கிறார். அவ்வகையில், பெண்களின் வளையலோசை, புல்லாங்குழலின் இனிய ஓசை, வீணையின் இனிய ஓசை ஆகிய கருவி வழிகளின் மூலமாகவும் பாரதி இசை இன்பத்தை அனுபவித்துக் கூறுகிறார். இது பாரதிக்கு கருவி வழியாக வரும் இசைகளின் மீது இருந்த ஈடுபாட்டை காட்டுகிறது. எனவே இயற்கை ஓசைகள், நாட்டுப் புறவியல் ஓசை, இசைக் கருவிகளின் இசை என்பவற்றில் பாரதி மனதை பறிகொடுத்தேன் எனக் கூறுவது இயற்கையின் மேன்மையும், இசை மீதான பாரதிக்கு இருக்கும் பற்றும் ஆர்வத்தையும் இக்கவிதைப் பகுதி வெளிப்படுத்துகிறது.

தமிழ் - II

பகுதி – I

01. பல்தேர்வு இலக்கணவினா விடைகள்

01.	1	02.	4	03.	2	04.	3	05.	5
06.	2	07.	4	08.	5	09.	1	10.	4
11.	1	12.	1	13.	5	14.	2	15.	4
16.	5	17.	2	18.	1	19.	3	20.	2

02.

அ) **சுருக்கம்**

விடய உள்ளடக்கம் - 10, வெளிப்பாட்டுத்திறன், அமைப்பு - 03

45 - 53 சொற்களில் இருத்தல் வேண்டும்.

மனிதப் பரிணாம வளர்ச்சியிலே மொழி முக்கியம் பெறுகின்றது. பண்பாட்டின் பிரதிபலிப்பாக, கருத்துப் பரிமாற்று ஊடகமாக செயற்படுகின்றது.

மௌனமும் சைகைகளும் மொழியின் கூறுகளாகும்.

இலக்கியப் படைப்பாளி தன் படைப்பாக்கத்தை வாசகர் முன் கொண்டுவர மொழி பயன்படுகின்றது.

இன்று பல்லின மக்கள் வாழும் சமுதாயத்தில் பல்லின மொழிப் பயன்பாடு காணப்படுகின்றது.

சர்வதேசத் தன்மையையும் அபிவிருத்தியையும் மேலோங்கச் செய்கின்றது.

ஆ) உரைநடை

1. 'ஒரு தர்ம சங்கடமான சூழ்நிலையில் அடுத்தவரைத் தலை குனிய வைப்பதை விட, நீ தலை குனிந்து போவது தவறே இல்லை.' என்பதனை பிரதான மனித நேயப்பண்பாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

2. நண்பர்கள், பெற்றோர், குழந்தை, கணவன், மனைவி, பிற சொந்தங்கள் போன்றோர்.

3. கடைப்பிடிக்க முடியாத பக்குவமற்ற சில சட்டதிட்டங்கள், ஒழுக்கம் பற்றிய அர்த்தமற்ற விதிமுறைகள், சுதந்திரமாக இயங்குவதற்குப் போதிய வசதி இல்லை என்று கருதும் நேரம். போன்றவற்றின் அடிப்படையில்

4. தொடர்ந்து தங்கள் இயல்பை மறைத்து வேறுவிதமாக காட்டிக்கொள்ள எவ்வளவோ சக்தி விரயமாகிறது, யார் யாரிடம் என்னென்ன சொன்னோம் என்று நினைவு வைத்துக்கொள்ள ஒவ்வொரு நிமிடமும் உள்ளே யோசித்துக் கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது, இதில், வாழ்க்கையின் அற்புதமான தருணங்கள் எத்தனையெத்தனை வீணாகின்றன. போன்றவற்றைக் கூறுகின்றார்.

03. கட்டுரை – பொருத்தமான முறையில் எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்

புள்ளித்திட்டம்

கட்டுரைப் பொருள், விடயறிவு	: 10 புள்ளிகள்
கருத்தமைவு, நடை, சொல்லாட்சி, பந்தியமைப்பு, மொழியமைப்பு	: 10 புள்ளிகள்
கட்டுரை அளவும் முடிப்பும்	: 05 புள்ளிகள்

பகுதி – II

04. சங்ககாலம்

அ) சங்ககால இலக்கியப் பண்புகளுக்கும் சங்கமருவிய கால இலக்கியப்பண்புகளுக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவற்றைப் பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.

சங்க காலத்தை இயற்கை நெறிக்காலம் என்றும் சங்க மருவிய காலத்தை அறநெறிக் காலம் என்றும் வகைப்படுத்துவர். சங்க காலத்தில் உலகியல் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட காதலும் போரும் இலக்கியத்தின் பொருள் மரபாக காணப்பட்டன. சங்க மருவிய காலத்தில் அறம், நீதி, ஆசரம், ஒழுக்கம் என்பன பொருள் மரபாகக் காணப்பட்டன.

சங்க கால இலக்கியம் ஒரு மனிதன் எப்படி வாழ்ந்தான் என்பதை எடுத்துக் கூறுகின்றன. ஆனால் சங்க மருவிய கால இலக்கியம் ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டுமென்ற வாழ்வாங்கு நெறிகளைக் கூறுகின்றன.

சங்க காலத்தில் சமயக் கருத்துக்கள் மிகையாக இடம்பெறவில்லை. தனிப்பாடல்களில் ஆங்காங்கே கடவுள்களைப் பற்றியும் கடவுள் வழிபாடு பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தன. சங்க மருவிய காலத்தில் சமண பௌத்த துறவிகள் தம் சமயக் கருத்துக்களை பிரசாரப்படுத்தும் வகையில் தொழிற்பட்டனர். உதாரணமாக கீழ்க்கணக்கு நூல்கள் பல சமணராலேயே எழுதப்பட்டன. மணிமேகலை பௌத்த சமய பிரசார நூலாகவே காணப்பட்டது.

சங்க காலத்தில் கூறப்பட்ட பல விடயங்கள் சங்கமருவிய கால இலக்கியங்கள் கண்டனம் செய்யும் வகையில் எதிர்மாறான களத்தில் கூறப்பட்டவை போல காணப்பட்டன. கொலை, களவு, புலால் போன்றவற்றை கண்டிக்கின்றன. புறநானூறு வீரத்தைப் பாடத் திருக்குறள் அன்பினை போதிக்கின்றது.

சங்க கால இலக்கியம் சுருங்கச் சொல்லி விளங்கவைப்பன. சங்க மருவிய காலப் பாடல்கள் எடுத்துக் கொண்ட பொருளை விரிவாக வலியுறுத்திக் கூறும் இயல்பினைக் கொண்டது.

சங்க காலத்தில் அகவல், வஞ்சி யாப்புக்களுடன் கலிப்பா, பரிபாட்டு என்பனவும் பின்பற்றப்பட்டன. சங்க மருவிய காலத்தில் வெண்பா யாப்புடன் அகவல், கட்டலைக் கலித்துறை, விருத்தம் போன்ற யாப்புக்களும் பயன்படுத்தப்பட்டன.

சங்க காலப் பாடல்கள் பெரும்பாலும் தனிநிலை செய்யுட்களாக காணப்பட்டன. சங்க மருவிய கால இலக்கியங்கள் தொடர்நிலைச் செய்யுட்களாகக் காணப்பட்டன.

www.ikeduk

ஆ) சங்ககாலத்திலே தோற்றம் பெற்ற ஆற்றுப்படை நூல்களையும் அவை அக்காலத்திலே பெற்ற வளர்ச்சியினையும், செல்வாக்கினையும் பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.
திருமுருகாற்றுப்படை
பொருநராற்றுப்படை
சிறுபாணாற்றுப்படை
பெரும்பாணாற்றுப்படை
கூத்தராற்றுப்படை போன்ற ஆற்றுப்படை இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.
ஆற்றுப்படுத்தல் என்பது ஆறு + படை. (ஆறு என்பது வழி, படை என்பது செலுத்துதல்) எனவே ஆற்றுப்படுத்தல் என்பது வழிப்படுத்தல் ஆகும். ஒரு அரசனிடம் சென்று பெருஞ்செல்வத்தைப் பெற்றுவரும் புலவர் ஏனைய புலவர்களையும் அவ்வள்ளலிடம் செல்லுமாறு வழிப்படுத்தல் ஆற்றுப்படுத்தல் எனப்படும்.
சங்க காலத்திலே தனியான இலக்கிய வடிவமாக வளர்ச்சியுற்ற சிறப்பினை உடையது. வழிப்படுத்தல் என்று பொருளுடையது. புரவலன் ஒருவனிடம் பரிசில் பெற்ற ஒருவர் (கூத்தர்) இன்னொருவருக்கு அவனிடம் பரிசில் பெறும் மார்க்கத்தை எடுத்துரைப்பதாக அமைவது. பாடாண்திணை சார்ந்தது பாட்டுடைத் தலைவனது கொடைச் சிறப்போடு அமைவது. வீரம், நாட்டு வளம் முதலானவற்றையும் புகழ்ந்துரைக்க வாய்ப்பானது. சங்க காலத்தில் அது பெற்ற வளர்ச்சி புறநானூற்றில் ஆற்றுப்படை அமைப்பில் அமைந்த பல சிறிய செய்யுள்கள் உள்ளன. நெடும் பாடல்களால் இயற்றப்பட்ட ஐந்து ஆற்றுப்படைகள் பத்துப்பாட்டில் உள்ளன. ஆற்றுப்படுத்துபவரின் பெயராலன்றி பாட்டுடைத் தலைவன் பெயரால் அமைந்த திருமுருகாற்றுப்படையை பாடிய நக்கீரர் தம் இறை அனுபவத்தை பாட புது வழியில் திறமையோடு இதனை கையாண்டார். இவ்வாறாக ஆற்றுப்படை இலக்கியங்களின் வளர்ச்சி அமைந்து இருந்தது.

இ) சங்ககாலத்திலே தோற்றம் பெற்ற இலக்கியங்களை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என புலவர்கள் வகைப்படுத்தி உள்ளனர். அவ்வாறு இலக்கியங்கள் வகைப்படுத்தப்பட்மைக்கு அடிப்படைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.
வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு நூல் தொகை நூல் எனப்பட்டது.
இவ்வாறு அமைந்தவை எட்டு நூல்கள் என்பதனால் அவை எட்டுத்தொகை நூல்கள் என வகைப்படுத்தப்பட்டன
உதாரணமாக 401 பாடல்களைக் கொண்ட குறுந்தொகை 206 புலவர்களால் பாடப்பட்டுள்ளமையை குறிப்பிடலாம்
தனியொரு புலவரால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு நூல் பாட்டு நூல் எனப்பட்டது
இவ்வாறு சங்ககாலத்திலே தோற்றம் பெற்ற பத்து நூல்களின் தொகுப்பு பத்துப்பாட்டு நூல் என வகைப்படுத்தப்பட்டது
உதாரணமாக நெடுநல்வாடை எனும் இலக்கியம் நக்கீரர் என்பவரினால் பாடப்பட்டதனைக் குறிப்பிடலாம்.

05. சோழர் காலம்

அ) சோழர்காலத்திலே தோற்றம் பெற்ற காப்பிய இலக்கியங்களையும் அவற்றின் சிறப்பான பண்புகளையும் பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.
சோழர் காலத்திலே பெருங்காப்பியம் சிறு காப்பியம் என பல்வேறு காப்பிய இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இவ்வாறு அதிகளவான காப்பியங்கள் தோற்றம் பெற்றமையினால் தமிழ் இலக்கிய வரலாற்றைப் பொறுத்த வரையில் சோழர் காலத்தினை 'காவிய நெறிக்காலம்' என அழைக்கின்றனர். இங்கு தோற்றம் பெற்ற காப்பிய இலக்கியங்களை பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.

பெருங்காப்பியம்	**சிறுகாப்பியம்**
சீவகசிந்தாமணி	நீலகேசி
வளையாபதி	சூளாமணி
குண்டலகேசி	யசோதர காவியம்
	நாககுமார காவியம்
	உதயணகுமார காவியம்

காப்பிய இலக்கியங்கள் பின்வருகின்ற பல்வேறு சிறப்பான பண்புகளைக் கொண்டமைந்து காணப்படுகின்றன.
தன்னிகரில்லா தலைவனை மையமாகக் கொண்டு பாடப்படுகின்ற இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன.
உலகியலோடு இறையியலையும் இணைத்துப் பாடுகின்ற மரபினைக் கொண்டமைந்த இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.
ஒருவரின் பிறப்புக் தொடக்கம் இறப்பு வரையான செய்திகளைக் கூறுவது.
அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருளையும் பாடுபொருளாகக் கொண்ட இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.
வீரம், ஆட்சிநலன், காதல் என அகத்திணை, புறத்திணை போன்ற அம்சங்களைப் பற்றிப் பாடுகின்ற மரபு காணப்பட்டமை.
சமூகத்திற்கான அறிவுரைகளை கதைகள் வாயிலாக கூறி சமூகத்தினை சீர்திருத்துகின்ற நோக்கினை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்களின் தோற்றம்.
வடமொழிச் செல்வாக்கும், தழுவலும் கொண்ட இலக்கியங்கள் தோற்றம் பெற்றமை.

ஆ) சோழர் காலத்தைப் பொறுத்த வரையில் பரணி இலக்கியத்தினுடைய ஆரம்பகாலமாக அமைகின்றது. அந்த வகையிலே பரணி இலக்கியத்தினுடைய அமைப்பினையும் சோழர்காலத்திலே தோற்றம் பெற்ற பரணி இலக்கியங்களினுடைய வளர்ச்சியினையும் பின்வருமாறு எடுத்து நோக்க முடியும்.

பரணி இலக்கியத்தினுடைய அமைப்பு
ஆயிரம் யானைகளை அமரிலே வென்ற வீரன் மேலே பாடப்படுவது பரணியாகும்.
கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடுபாடியது, பேய் பாடியது போன்ற உறுப்புக்களைக் கொண்டது.
புறப்பொருள் அமைதி தோன்ற கலித் தாழிசை துறையில் பாடப்படுவது.
போர்க்களத்திலே பேய்கள் பரணி நாளிலே கூழ் அட்டு உண்டு மகிழ்ந்து போர்க்களத்திலே வென்ற தலைவனை புகழ்ந்து பாடுவதாக அமையப் பெற்றது.
பேய்கள் உண்டு மகிழும் போர்க்களச் சித்திரிப்பு கூளிப் பேய்களைப் பாத்திரங்களாகக் கொண்டு பாடப்படுவது.

பரணி இலக்கியத்தினுடைய வளர்ச்சி

சோழர் காலத்தைப் பொறுத்த வரையிலே கலிங்கத்துப்பரணி, தக்கயாகப்பரணி போன்ற பரணி இலக்கியங்களின் தோற்றத்தினைக் காணலாம்.

குலோத்துங்க சோழனின் படைதளபதி கருணாகர தொண்டமான் கலிங்க நாட்டின் மீது போர் தொடுத்த செய்தியை கூறுவதாக கலிங்கத்துப்பரணி விளங்குகிறது. தமிழில் எழுந்த முதலாவது பரணியாகவும் விளங்கிறது.

கலிங்கத்து பரணியின் ஆசிரியர் சயங்கொண்டார் என்பவராகும்.

கலிங்கத்து பரணியிலே தாழிசை துறை விருத்தம் போன்ற யாப்புக்கள் கையாளப்பட்டு இலக்கியம் படைக்கப்பட்டுள்ளது.

கலிங்கத்து பரணியில் குலோத்துங்க சோழனின் வீரம், படைபலம், போர் உத்தி போன்ற சிறப்புக்களை சயங்கொண்டார் பொருளணி சொல்லணி போன்றவற்றினூடாகவும், இலக்கியச்சுவை போன்றவற்றினூடாகவும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

ஒட்டக்கூத்தரினால் பாடப்பட்ட தக்கயாகப்பரணியும் சோழர்காலத்திலே பரணி வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகிக்கின்றது.

இவ்விலக்கியமும் வீரன் மீது பாடப்பட்ட ஒரு பரணி பிரபந்தம் ஆகும். தக்கனுடைய யாகத்தை வீரபத்திரர் அழித்த வரலாறுகளை கூறுவதாக தக்கயாகப்பரணி விளங்குகிறது.

வடமொழியின் புராணக் கதைகளைத் தழுவி தக்கயாகப்பரணி படைக்கப்பட்டுள்ளது.

அரசர் புகழை அவர்கள் வென்ற போர்கள் வாயிலாக காட்டிய பரணி இலக்கியம் பின் தக்கயாகப்பரணியிலே இறைவனுடைய வீரச்செயல்களைப் பாடுகின்ற இலக்கியமாக மாற்றம் பெற்று விளங்கியது.

இ) விஜயநகர நாயக்கர் காலத்திலே காளமேகப் புலவருடைய பங்களிப்பு மிக முக்கியமானதாகும். அந்த வகையிலே அவர் பெறும் முக்கியத்தினையும் அவருடைய கவியாற்றலினையும் பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.

காளமேகம் 15 ஆம் நுற்றாண்டில் வாழ்ந்த ஒரு தமிழ்ப் புலவர் ஆவார். வைணவ சமயத்தில் பிறந்த இவர், திருவானைக்கா கோவிலைச் சேர்ந்த மோகனாங்கி என்பவளிடம் ஆசை கொண்டார். இதனால் தனது சமயத்தை விட்டு மோகனாங்கி சார்ந்திருந்த சைவ சமயத்துக்கு மாறினார். இவர் சைவப் பாடல்கள் பாடுவதில் வல்லவர் என்று கூறப்படுகின்றது. ஆனாலும் இவர் பல சிறந்த நயம் மிகுந்த பாடல்களையும் பாடியுள்ளார். இவர் பாடிய சிலேடைப் பாடல்களும், நகைச் சுவைப் பாடல்களும் பல உள்ளன. சமயம் சார்ந்த நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். இவர் ஒரு ஆசு கவி ஆவார்.

திருவானைக்கா உலா, சரஸ்வதி மாலை,பரப்பிரம்ம விளக்கம், சித்திர மடல் முதலியவை இவர் இயற்றிய நூல்களாகும்.

திருவரங்கத்து கோவிலில் பரிசாரகர் (சமையல் செய்பவர்) இருந்தார். திருவானைக்காவில் சிவத் தொண்டு செய்து வந்த மோகனாங்கி என்ற பெண் மீது மாளாக்காதல் கொண்டு இருந்தார். அவள் பொருட்டு ஒரு நாள் அங்குச்சென்று கோவிலின் உட்புற பிராகாரத்தில் அவள் வரவுக்காகக் காத்திருக்கையில் தூக்கம் வர படுத்து உறங்கிப்போனார். அப்பெண்ணும் இவரைத் தேடிக் காணாமல் திரும்பிச்சென்றுவிட்டாள். கோவிலும் திருக்காப்பிடப்பட்டது. அக்கோவிலின் மற்றொரு பக்கத்தில் ஓர் அந்தணன் சரசுவதி தேவியை நோக்கி தவங்கிடந்தான். சரசுவதிதேவி அதற்கிணங்கி அவன் முன்தோன்றித் தமது வாயில் இருந்த தாம்பூலத்தை அவ்வந்தணன் வாயிலுமிழப் போக அதை அவன் வாங்க மறுத்ததால் சினந்து அத்தாம்பூலத்தை வரதன் (காளமேகத்தின் இயற்பெயர்) வாயில் உமிழ்ந்துச் சென்றாள். வரதனும் தன் அன்புக் காதலி தான் அதைத் தந்ததாகக் கருதி அதனை ஏற்றுக்கொண்டான். அது முதல் தேவி அனுக்கிரகத்தால் கல்லாமலே கவி மழை பொழியத்தொடங்கினான். அதனாலேயே வரதன் என்ற பெயர் மாறி காளமேகம் என மாறிற்று.

சிலேடைக்கவி, வசைக்கவி, ஆசுகவி முதலானவற்றைப் பாடுவதில் ஆற்றல் மிக்கவர்.

யமகம், திரிபு, மடக்கு முதலிய சொல்லலங்காரங்களில் வல்லவர்.

எள்ளல், அங்கதச்சுவை மிக்க பாடல்களைப்பாடியவர்.

சூழ்நிலைக்கு ஏற்ப பாடும் ஆற்றல் வாய்த்தவர்.

சுவைமிக்க தனிச் செய்யுள்களையும், பிரபந்தங்களையும் பாடியவர் - உதாரணம் : திருவானைக்காவுலா.

06. ஆரியச்சக்கரவர்த்திகள் காலம்

அ) ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் பல்வேறு வகையான இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்.

சோதிட நூல்கள்	**வைத்திய நூல்கள்**	**பொதுமக்கள் சார்பான இலக்கியம்**
சரசோதிமாலை	பரராசசேகரம்	கதிரைமலைப்பள்ளு
செகராசசேகர மாலை	செகராசசேகரம்	
புராணம்	**வரலாற்று நூல்கள்**	**காப்பியம்**
தட்சிணகைலாய புராணம்	வையாபாடல்	இரகுவம்சம்
திருக்கரசைப்புராணம்	கோணேசர் கல்வெட்டு	கண்ணகி வழக்குரை
வியாக்கிரபாத புராணம்	கைலாய மாலை	கோவலனார் கதை
		சிலம்பு கூறல்

ஆ) ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த அறிவியல் சார்ந்த இலக்கியங்களையும் அவற்றின் பின்னணியினையும் பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.

ஆரியச் சக்கரவர்த்திகள் கால அறிவியல் சார்ந்த இலக்கியங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

மருத்துவம் - பரராசசேகரம், செகராசசேகரம்

சோதிடம் - செகராசசேகரமாலை, சரசோதி மாலை

தோற்றத்திற்கான பின்னணி

மக்கள் வாழ்க்கையில் மருத்துவமும் சோதிடமும் மிக முக்கியமானவை.

மருத்துவமும் சோதிடமும் பிரிக்க முடியாத தொடர்புடையவை.

இக்காலப்பகுதியில் தமிழ்நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் குடியேறியோரில் மருத்துவம், சோதிடம் அறிந்தவர்கள் இருந்தமை, வடமொழிக் கல்வியறிவு மேலோங்கி இருந்தமை.

மன்னர்களே சிறந்த மருத்துவர்களாக இருந்தமை.

நிறுவன ரீதியான ஆதரவு கிடைத்தமை.

மன்னர்களின் ஆட்சி ஸ்திரமற்றுக் காணப்பட்டமை.

கேரளாவில் அதிகளவில் தோற்றம் பெற்ற சோதிட நூல்களின் தாக்கம்.

இ) ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்திலே எழுந்த இலக்கியங்கள் சிறப்பான பண்புகளைக் கொண்டு விளங்கின. அவற்றைப் பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.
பலதுறை சார்ந்து இலக்கியங்கள் தோற்றம் பெற்றன உதாரணமாக சமயம், வரலாறு, மருத்துவம், சோதிடம்
அளவில் பெரிய இலக்கியங்களாக அமைந்தன. உதாரணமாக பரராசசேகரம், இரகுவம்சம், கண்ணகி வழக்குரை
தமிழ்நாட்டு இலக்கியச் செல்வாக்கு காணப்பட்டது.
இக்காலப்பகுதியில் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் பல வடமொழியின் தழுவல் மற்றும் மொழிபெயர்ப்புக்களாக அமைந்தமை.
நூல்கள் பல அந்தாதித் தொடையில் பாடப்பட்டுள்ளன.
மன்னரின் ஆதரவினை வெளிப்படுத்தற் பொருட்டு சில நூல்களின் பெயர்கள் மன்னர் பெயர்களிலேயே அமைந்துள்ளன. உதாரணமாக பரராசசேகரம், செகராசசேகரம், செகராசசேகரமாலை
பொதுமக்கள் சார்பான இலக்கியங்களின் தோற்றம் உதாரணமாக கதிரைமலைப்பள்ளு
இலக்கியங்களில் இந்துசமயச் செல்வாக்கு காணப்பட்டமை

07. சிறுகுறிப்பு (பெரியார்களின் தமிழ்ப்பணிகள்)

அ) சி.வி.வேலப்பிள்ளை

சி. வி. வேலுப்பிள்ளை (செப்டம்பர் 14, 1914 - நவம்பர் 19, 1984) இலங்கை மலையகத்தின் முன்னோடி எழுத்தாளர்களுள் ஒருவர். ஆசிரியர், அரசியல்வாதி, தொழிற்சங்கவாதி, கவிஞர், பத்திரிகை ஆசிரியர் எனப் பன்முக ஆளுமையாளராகத் திகழ்ந்தவர். கவிதைகள், நாவல்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியுள்ள இவர் இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினராக 1947 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டார். கவிஞர், நாவலாசிரியர், தொழிற்சங்கவாதி, பாராளுமன்ற உறுப்பினர்,ஈழத்து எழுத்தாளர். வேலுப்பிள்ளை இலங்கையின் மலையகத்தில் மடக்கொம்பரையில் பெரிய கங்காணிக்கு மகனாக பிறந்தார். அவர் கொழும்பில் நாலந்தா கல்லூரியில் கல்வி கற்றார். சேக்ஸ்பியர் முதலியோரின் ஆக்கங்களை இவர் படித்துத் தேறினார். ஆசிரியராகப் பணியாற்றினார். இலங்கை வானொலியான வொயிஸ் ஒப் லங்கா (Voice of Lanka) அவரது Tea Pluckers என்ற ஆங்கிலக் கவிதையை அறிமுகம் செய்தது. அவரது திறமையை வியந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமான் தனது "காங்கிரஸ் நியூஸ்" என்ற ஏட்டின் ஆசிரியராக அமர்த்திக் கொண்டார். கதை என்னும் இலக்கிய இதழ், மற்றும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் மாவலி என்ற மாத இதழ் ஆகியவற்றின் ஆசிரியராக இருந்து செயல்பட்டார். அந்நாளில் தினகரன் ஆசிரியராக இருந்த பேராசிரியர் க. கைலாசபதி மலையகப் படைப்பாளிகளை ஊக்குவித்து மலையக இலக்கியங்களை வெளியிட்டு வந்தார். அவர் சி. வி. வேலுப்பிள்ளையின் நிறைய படைப்புகளை வெளிக்கொணர்ந்தார். பொன். கிருஷ்ணசாமி இவரது ஆங்கிலக் கவிதைகளை மொழிபெயர்த்து தினகரனில் வெளியிட்டார். 1934 ஆம் ஆண்டில் இரவீந்திரநாத் தாகூர் இலங்கை வந்திருந்த போது அவரை 1934 மே 14 இல் கொழும்பில் சந்தித்து தன்னுடைய விஸ்மாஜினி என்ற இசை நாடக நூலை வழங்கி ஆசி பெற்றார்.1961 இல் வீரகேசரியில் "காலம் பதில் சொல்லட்டும், சாக்குக்காரன் என்ற இரு சிறுகதைகளை இவர் எழுதினார். வேலுப்பிள்ளை சிங்களப் பெண் ஒருவரை விரும்பித் திருமணம் செய்து கொண்டார். அவரது மனைவியும் சில கவிதைகளை எழுதியுள்ளார். 1947 இல் சோல்பரி அரசியல் சாசனப்படி இடம்பெற்ற முதலாவது நாடாளுமன்ற தேர்தலில் மலையகத்திலிருந்து சென்ற 7 பேரில் ஒருவராக தலவாக்கலை பிரதேசத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். இவரது நூல்கள் தொகுவிஸ்மாஜினி (இசை நாடகம்) WayFarer (1949) In Ceylon's Tea Garden (1952) இலங்கை தேயிலைத் தோட்டத்திலே (தமிழாக்கம்: சக்தி பாலையா) வீடற்றவன், இனிப்படமாட்டேன், வாழ்வற்ற வாழ்வு, (புதினம், தமிழாக்கம்: பொன். கிருஷ்ணசாமி) எல்லைப்புறம், காதல் சித்திரம, நாடற்றவர்.

ஆ) பேராசிரியர் சு. வித்தியானந்தன்

நண்பர்களாலும் அவரது மாணவர்களாலும் 'வித்தி' என அழைக்கப்பட்ட பேராசிரியர், யாழ்ப்பாண மாவட்டத்தின் தெல்லிப்பழையில் வழக்கறிஞரான சுப்பிரமணியத்தின் மகனாகப் பிறந்தார். தாயார் பெயர் முத்தம்மா. வீமன்காமம் அவரை வளர்த்தெடுத்த ஊர். அவரது குடும்ப முன்னோடிகள் ஆறுமுக நாவலரின் செல்வாக்குக்குட்பட்டு கல்விக் கூடங்களையும் நிறுவியுள்ளார்கள். வித்தியானந்தனின் பேரன் சின்னத்தம்பியால் தொடங்கப்பட்டு தந்தையால் வளர்ந்த வீமன்காமம் தமிழ் பாடசாலையில் தொடக்கக் கல்வியைக் கற்றார். பின்னர் தெல்லிப்பளை ஒன்றியக் கல்லூரி, பரி. யோவான் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, இலங்கைப் பல்கலைக்கழகம், இலண்டன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கற்றுத் தேர்ந்தவர் வித்தி. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சுவாமி விபுலானந்த அடிகள், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை ஆகியோர் இவரது ஆசிரியர்களாகத் திகழ்ந்தனர். இங்கு தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்று கலைமாணி, முதுகலைமாணி ஆகிய பட்டங்களைப் பெற்ற முதலாமவர் வித்தி. தனது 26வது வயதில் இலண்டனில் முனைவர் பட்டம் பெற்றார். முனைவர் பட்டப் பேற்றுக்காக பதிற்றுப்பத்தை ஆய்வுப் பொருளாக எடுத்தவர் அதனை ஆங்கில வடிவில் முடங்கிப்போக விடாமல் , "தமிழர் சால்பு' எனும் தலை சிறந்த தமிழ் நூலாக மறுவரைவு செய்து தந்தார். இந்நூல், தமிழர் வரலாற்றின் தொடக்க காலப் பண்பாட்டைத் தெளிவாக ஆய்வு செய்து வெளிப்படுத்தியது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிய வித்தியானந்தன் தனது மாணவியாக அறிமுகமான நுணாவிலைச் சேர்ந்த கமலாதேவி நாகலிங்கம் மீது காதல் கொண்டு 1957 இல் மனைவியாக்கிக் கொண்டார். இவர்களுக்கு மூன்று மகன்கள், இரு மகள்கள். அருள்நம்பி, மகிழ்நங்கை, அன்புச்செல்வி, இன்பச்செல்வன், சிவமைந்தன் என்பன இவரின் பிள்ளைகளின் பெயர்கள். மனைவி கமலாதேவி அவர் நோயுற்று 1977 இல் மறைந்தார். ஆகஸ்ட் 1977 இல் யாழ்ப்பாண வளாகத்தின் தலைவரானார். அதன் பின்னர் ஜனவரி 1979 இல் அவ்வளாகம் பல்கலைக்கழகமான போது அதன் முதலாவது துணைவேந்தரானார். தன்னால் இயன்றளவில் யாழ்ப்பாண வளாகமாக இருந்த ஒன்றினை முழுமையான பல்கலைக்கழகம் ஆக்குவதற்கு அரும்பாடுபட்டு உழைத்தார். பல்கலைக்கழக மாணவர்களது தேவைகளை நிறைவு செய்யக்கூடியதாக அவ்வவ்போது எழுதிய கட்டுரைகள் பின்னர் தொகுக்கப்பட்டுத் தனி நூல்களாயின. கா. சிவத்தம்பி, க. கைலாசபதி, பொ. பூலோகசிங்கம், ஆ. வேலுப்பிள்ளை போன்ற தமிழறிஞர்கள் இவரது மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். 1970 ஆம் ஆண்டில் பேராசிரியர் ஜீன் பிலியோசா பாரிசிலே மூன்றாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை நடத்தினார். இம்மாநாட்டிற்கு இலங்கையில் இருந்து பேராசிரியர் வித்தியானந்தன் கலந்து கொண்டார். 1974 ஆம் ஆண்டில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்திலே நடைபெறுவதற்கு முன்னின்று உழைத்தவர்களில் ஒருவர் பேராசிரியர் வித்தியானந்தன். ஈழத்தமிழ்த் தேசியத்தின் அடியாதாரமாக அமையத்தக்க நாட்டார் இலக்கியத்தையும் நாட்டுப்புறக் கலையையும் தேடித்தொகுத்துத் தேசியப் பண்பு சார்ந்து வடிவப்படுத்தலானார். தனது குருவான பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகச் செயற்பாடுகளின் பரிணமிப்பாக நாட்டுக் கூத்துகளை நவீன வாழ்முறைக்கு உகந்த வகையில் நவீனப்படுத்தினார். அரங்காற்றுகை மட்டுமன்றி, பல நாட்டுக்கூத்துப் பிரதிகளை அச்சேற்றினார்.

இ) உடுப்பிட்டி சிவசம்புப் புலவர்

அ. சிவசம்புப் புலவர் (1830 - செப்டம்பர் 29, 1910) இலங்கை, யாழ்ப்பாண மாவட்டத்தில் உடுப்பிட்டி என்னும் ஊரைச் சேர்ந்தவர். 1830 ஆம் ஆண்டு பிறந்தார். தந்தையார் அம்பலவாணர் அருளம்பல முதலியார். தாயார் கதிராசிப் பிள்ளை. இவர் நல்லூரைச் சேர்ந்த சரவணமுத்துப் புலவரிடமும், பின்னர் அவரது மாணவரான சம்பந்தப் புலவரிடமும் தமிழ் கற்றார். தமிழ் இலக்கண நூல்களையும், சங்க இலக்கியம், இதிகாசங்கள் முதலியவற்றையும் முறையாகக் கற்றுத்தேர்ந்தார். இவருக்கு இளமையிலேயே கவிபாடும் திறன் வாய்த்திருந்தது. ஆறுமுக நாவலர் காலத்தில் வாழ்ந்த இவர் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இந்தியாவிலும் தமிழ்நாட்டில் தமிழ்ப் பணி புரிந்துள்ளார். இவர் 1910 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 29 ஆம் தேதி காலமானார். இராமநாதபுரம் அரசர் இரவிகுல விஜய ரகுநாத பாஸ்கர சேதுபதி மீது கல்லாடக் கலித்துறை, நான்மணிமாலை, இரட்டை மணிமாலை போன்றவற்றையும், மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவிய பாண்டித்துரைத் தேவர் மீது நான்மணி மாலையும் பாடியுள்ளார். அறுபது பிரபந்தங்கள் உட்படப் பல செய்யுள்களையும், மறையசையந்தாதியுரை, யாப்பருங்கலக்காரிகையுரை, கந்தபுரான வள்ளியம்மை திருமணப்படலவுரை போன்ற உரைநூல்களையும் இவர் ஆக்கியுள்ளார். திருச்செந்தில்யமகவந்தாதி கந்தவனநாதர்பதிகம், வல்லிபுரநாதர்பதிகம், புலோலிநால்வர்நாலை திருவேரக யமகஅந்தாதி புலோலிநான்மணிமாலை திருச்செந்தில்யமகவந்தாதி, எட்டிகுடிஊஞ்சல்(1890) எட்டிகுடிமும்மணிக்கோவை (1890) எட்டிகுடிப்பதிகம்(1890) வல்வைக் கலித்துறை போன்ற இலக்கியங்களையும் படைத்தருளியுள்ளார்.

ஈ) இ.முருகையன்

"கவிஞர் இ. முருகையன் தமது காலத்தில் ஆற்றல் மிக்க படைப்பாளியாக விளங்கியதால் அவரது படைப்புகள் முக்கியமான கணிப்பிற்குரியதாகியதுடன், நவீன தமிழ் கவிதை சம்பந்தமான பல சிக்கலான பிரச்சனைகளுக்கு ஒளி பாய்ச்சுவனவாகவும் அமைந்துள்ளன. தனிமனித அவல புலம்பல்களுக்கும் சமூக உணர்வுமிக்க படைப்புகளுக்குமான அடிப்படை வேறுபாடு இதுதான். பாரதிக்குப் பின் வந்த கவிஞரான முருகையனில் பாரதி பரம்பரையின் பரிணாமத்தைக் காணமுடிகிறது. அந்த வகையில் கவிஞர். இ. முருகையன் தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்துவமான பாதையில் வரித்துச் சென்றவர் என்பதில் இருநிலைப்பட்ட கருத்துகளுக்கு இடமில்லை. யாவற்றுக்கும் மேலாக அவர் தமிழ் அறிஞராகவும், திறனாய்வாளராகவும் சீரிய முற்போக்குச் சிந்தனையாளராகவும் விளங்கினார்." என ஈழத்து எழுத்தாளர் லெனின் மதிவாணம் பதிவு செய்துள்ளார். முருகையன் யாழ்ப்பாணம் சாகவச்சேரி கல்வயல் என்னும் கிராமத்தில் தமிழாசிரியர் இராமப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினருக்கு 23.04.1935 அன்று மகனாகப் பிறந்தார். ஆரம்பக் கல்வியை கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், தொடர்ந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் அதன் பின் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்றார். கொழும்பு பல்கலைக் கழகத்தில் பயின்று விஞ்ஞானப் பட்டதாரியானார். இவர் லண்டன் கலைமாணிப் பட்டத்தையும் பெற்றார். விஞ்ஞானத்துறையில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்ற இவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. சாகவச்சேரி இந்துக்கல்லூரியில் 1956 ஆம் ஆண்டு விஞ்ஞான ஆசிரியராகத் தமது பணியை ஆரம்பித்த முருகையன், அறிவியல்-பாடநூல் மொழிபெயர்ப்பாளராகவும், தமிழ்மொழிப் பாடநூல் குழுவின் முதன்மைப் பதிப்பாசிரியராகவும், கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், முல்லைத் தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கல்விப்பணிப்பாளராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முதுதுணைப் பதிவாளராகவும் பல பதவிகளை வகித்து 1995 ஆம் ஆண்டு ஒய்வு பெற்றார். இவர் பள்ளியில் பயிலும் காலத்திலேயே தமிழ்மணி, யாழ்ப்பாடி, இந்துசாசனம், கலைச்சுடர் ஆகிய இதழ்களில் கவிதைகள் எழுதினார்.

கவிஞர் இ. முருகையன் தமிழுலகுக்கு படைத்து அளித்துள்ள நூல்கள்: நெடும்பகல், நாங்கள் மனிதர், மாடும் கயிறு அறுக்கும், ஒவ்வொரு புல்லும் பிள்ளையும், அது அவர்கள், ஆதி பகவன் (காவியம்) முதலிய கவிதை நூல்களை படைத்து அளித்துள்ளார். வெறியாட்டு (கவிதை நாடகம்), சிந்தனைப் புயல், நித்திலக் கோபுரம், வந்து சேர்ந்தன, தரிசனம், கோபுரவாசல், கடுழியம், செங்கோல், கலைக்கடல், கொண்டு வா தீயை கொளுத்து விறகை எல்லாம், சும சும மகாதேவா, அப்பரும் சுப்பரும், பொய்க்கால், குற்றம் குற்றமே, தந்தையின் கூற்றுவன், கந்தப்ப மூர்த்தியார், இடைத்திரை, குனிந்த தலை, இரு துயரங்கள், கலிலியோ, உயிர்த்த மனிதர் கூற்று, எல்லாம் சரி வரும், நாம் இருக்கும் நாடு, பில்கணியம், வழமை, அந்தகனே ஆனாலும், கூடல் முதலிய நாடகங்களை எழுதியுள்ளார். இதயத்தின் இளவேனில் (மொழிபெயர்ப்புக் கவிதைகள்), ஒரு வரம் (ஆங்கிலக் கவிதைகளின் மொழிபெயர்ப்பு), உண்மை (மொழிபெயர்ப்பு நாடகத் தொகுதி), கர்வபங்கம் (சொபொகிளிஸின் அன்ரிகனி நாடகத்தின் மொழிபெயர்ப்பு) முதலிய மொழி பெயர்ப்பு நூல்களையும் அளித்துள்ளார். மேலும் காளிதாசன் சமஸ்கிருதத்தில் எழுதிய 'இறையனர் களவியல் ' என்னும் கவிதை நூலை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து குமார சம்பவத்தை அடியொற்றி 'இளநலம் ' என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார். இன்றைய உலகில் இலக்கியம், ஒரு சில விதி செய்வோம், கவிதை நயம் (பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதியுடன் இணைந்து எழுதியது), மொழி பெயர்ப்பு நுட்பம் -ஓர் அறிமுகம் ஆகிய நூல்களையும் எழுதி அளித்துள்ளார்.

இ. முருகையன் எழுதிய கோபுரவாசல் (கவிதை நாடகம்) ஆலயப் பிரவேசம் சமூகப் பிரச்சினையாக உருவெடுத்திருந்த காலகட்டத்தில், பழைய நந்தனார் சரித்திரக் கதையைப் பொருத்தமாக மாற்றிச் சமகாலத்துக்குத் தொடர்புடைய நாடகமாக அமைந்துள்ளது. "இவரது 'நாடகம் நான்கு' தொகுதிக்கு சிறப்பொன்றுண்டு. எத்தனையோ நாடகங்கள் மேடையில் பார்க்கும் பொழுது ஓரளவு சுவராஸ்யமாயிருப்பினும், அவற்றை இலக்கியமாக போற்றத்தக்க சிறப்பற்று மறைந்து விடுகின்றன. ஆனால், நடிப்பதற்கென்றே திட்டமிட்டு எழுதப்பட்ட ஒரு நாடகம், மேடையில் வெற்றி பெற்று அதன் கருத்தாழத்தினாலும், நடைச் சிறப்பினாலும், உணர்வு நலத்தினாலும் நூலாகப் படிப்பதற்கும், மீண்டும் மீண்டும் நடிப்பதற்கும் உகந்ததாகக் கருதப்படுமாயின் அதுவே ஆற்றல் மிக்க நாடக இலக்கியமாகும். பா நாடகங்களுக்கு இப்பண்பு சாலப் பொருந்தும். காத்திரமான சமூக உள்ளடக்கத்தைக் கொண்டனவாயும், உயர் கவிதையின், சொற் செறிவு, தரிசன வீச்சு, தெளிவு, ஓசைச் சிறப்பு முதலிய அம்சங்கள் பொருந்தப் பெற்றனவானவாயும், தனிப்பட்ட நிகழ்வுகளையும் தாண்டி உலகப் பொதுவான உணர்வுகளை எழுப்புனவாயும் இந்நான்கு நாடகங்களும் அச்சுருவிலும் வெளிவரக் கூடியனவாய் விளங்குகின்றன. காட்சி நயம் மட்டும் நாடகத்துக்கு உயிரூட்ட முடியாது. கருத்து மேம்பாடு மாத்திரம் நாடகத்தை இயங்க வைத்து விடாது. இரண்டும் இணைவுற்று இயங்குவதே நாடகத்தின் உயிர் நிலையாகும். இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள நாடகாசிரியர்கள் கவிஞராயும் இருப்பது அவர்தம் படைப்புகள் இலக்கியச் செவ்வியுடன் விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது. நாடக உணர்வு நன்கு வாய்க்கப்பெற்ற முருகையன் எழுதியுள்ள கவிதைகள் பலவற்றிலும் நாடகப் பண்புகள் அவற்றின் உள்ளியல்பாய் இருக்கக் காணலாம். மேலும், பாராளுமன்ற அரசியலின் போலித்தன்மை, கட்சி முறைகளின் வறுமை, வர்க்க முரண்பாடுகளின் உண்மை, போராட்டங்களின் இன்றியமையாமை என்பன இந்நாடகங்கள் உணர்த்தும் மெய்ப்பொருள்கள்." ஏன ஈழத்து நாடகவியல் விமர்சகர்கள் மதிப்பீடு செய்துள்ளனர்.

08. அ

1. மாதாந்தம் பிள்ளை பெற்றமையா? அல்லது நிவாரணம் பெற்றமையா? என்பது மயக்கமாக உள்ளது.
   கமலா பிள்ளை பெற்றமைக்காக மாதாந்தம் நிவாரணங்களைப் பெற்று வந்தாள். என எழுத வேண்டும்

2. இவ்வாக்கியத்தில் எண் வழு இடம்பெறுகின்றது. அதாவது எழுவாய் ஒருமையிலும், பயனிலை பன்மையிலும் அமைந்தள்ளது.
   இராமன், இலக்குமணன், சீதையுடன் காட்டுக்குச் சென்றான். என எழுது வேண்டும்

3. அண்ணலும் நோக்கினான் - சிறப்புப் பொருள்
   யாரும் இல்லை தானே கள்வன் - பிரிநிலைப் பொருள்
   ஓய்வும் ஆயிற்று - ஆக்கப் பொருள்
   பாலும் தேனும் - எண்ணுப் பொருள்

4. பத்திரிகைகள் அமைச்சரின் ஊழல்களை அம்பலமாக்கின

5. திரள்மீடிறன் - திரண்மீடிறன் இடதுபக்கம் - இடப்பக்கம்
   சில அறிஞர்கள் - அறிஞர்கள் சிலர் கலாச்சாரம் - கலாசாரம்

ஆ)

1. இடைநிலைகள்

பகுபதங்களிலே பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்கும் இடைச்சொற்கள் இடைநிலைகள் ஆகும். இவை பெயர் இடைநிலைகள், வினை இடைநிலைகள் என இருவகைப்படும்.

பெயரிடைநிலைகள் காலம் காட்டுவதில்லை

அறிஞர் - அறி + ஞ் + அர்

கலைஞன் - கலை + ஞ் + அன்

வினையிடைநிலைகள் காலம் காட்டுவன.

இறந்தகால இடைநிலைகள் - த்,ட்,ற்,இன்,ன்,இ

உண்டான் - உண் + ட் + ஆன்

நிகழ்கால இடைநிலைகள் - கின்று, கிறு, ஆநின்று

நடக்கின்றான் - நட + கின்று + ஆன்

எதிர்கால இடைநிலைகள் - ப், வ்

செய்வான் - செய் + வ் + ஆன்

எதிர்மறை இடைநிலைகள் - இல், அல், ஆ

நடந்திலன் - நடந்து + இல் + அன்

2. குற்றியலுகரப் புணரச்சி

குற்றியலுகர ஈற்றுச் சொற்களின் முன் வருமொழி முதலில் உயிர் வரின் குற்றியலுகரம் கெட்டுப் புணர்தல் குற்றியலுகரப் புணர்ச்சியாகும். 'உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடும்' எனும் விதிப்படி இவை புணரும். அந்தவகையிலே அறுவகைக் குற்றியலுகரமும் புணர்ச்சியில் கெட்டு வரும். உதாரணமாக பின்வருவனவற்றை எடுத்து நோக்கலாம்.

பட்டு + ஆடை – பட்டாடை

காது + அடைத்தது – காதடைத்தது

நாடு + இல்லை – நாடில்லை

கழுத்து + அறுப்பு – கழுத்தறுப்பு

கயிறு + அறுந்தது – கயிறறுந்தது

அகப்பணர்ச்சியிலும் ஈற்றுகரம் கெட்டு வரும்

காது + ஐ – காதை

தற்காலத்தில் புறப்புணரச்சியில் உயிர் வரினும் பெரும்பாலும் குற்றியலுகரம் கெடுவதில்லை
அவர்தான் எனக்கு உதவியவர்

3. பால் பகா அ.ஃறிணைப்பெயர்

அ.ஃறிணை ஒன்றன் பாலுக்குரிய, பலவின் பாலுக்குரிய விகுதிகளைப் பெறாது வரும் அ.ஃறிணைப் பெயர்கள் ஒன்றன் பாலுக்கும், பலவின் பாலுக்கும் பொதுவாக வரும். அப்பெயர்கள் கொண்டு முடியும் வினைகளைப் பொறுத்தே அவற்றின் பால் தீர்மானிக்கப்படும். அவையே பால் பகா அ.ஃறிணைப் பெயரகள் அகும். இன்ன பால் என்று பிரித்துச் சொல்ல முடியாத பெயர்ச்சொற்களாக காணப்படும். ஒன்றன் பாலைக் காட்டும் 'து' விகுதியையும், பலவின் பாலைக்காட்டும் 'அ, வை, கள்' போன்ற விகுதிகள் போன்றவற்றைப் பெறாத அ.ஃறிணைப் பெயர்கள் பால்பகா அ.ஃறிணைப் பெயர்களாகும். உதாரணமாக பின்வருவனவற்றை எடுத்து நோக்கலாம்.

கண் சிவந்தது – கண் சிவந்தன

ஒரு ரூபாய் - பத்து ரூபாய்

குயில் கூவியது – குயில் கூவின

மாடு வந்தது – மாடு வந்தன

www.lkedu.lk